Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 15 (14.09.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 345

உங்களுக்குத் தேவையான நவீன விதமான சன் கிளாஸ், டே அன் நயிட் கிளாஸ், பிளாஸ்டிக் லென்ஸ் போன்ற சகலவிதமான கண்ணாடிகள் 1 மணித்தியாலத்தில் குறைந்த விலையில் செய்துதரப்படும். இலவச கண் பரிசோதனை. பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

ஒளிச்சுடர் மூக்குக் கண்ணாடியகம்

44A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (சி-1239)

## அம்பாறை மாவட்ட நிலைவரங்களை நேரில் சென்று பார்வையிட்டார் அகாஷி!

(அம்பாறை)

ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி நேற்றுக்காலை 9 மணிக்கு, விசேட ஹெலிகொப்ரர் மூலம், கல்முனைக்குச் சென்றார். அங்கு அவரை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் வரவேற்றனர்.

கல்முனை சென்ற அகாஷி கல்முனையிலுள்ள மஹ்மூத் பாடசாலையில் முஸ்லிம் மக்களுடன் சந்திப்பொன்றை நடத்தினார். இந்தச் சந்திப்பில் - விவசாயம், மீன்பிடி, அபிவிருத்தி மற்றும் பல்வேறு விடயங்களில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள், தூதுவர் அகாஷியிடம் எடுத்துக் கூறினர். இவற்றைக் கேட்டறிந்த தூதுவர் அங்கு உரையாற்றுகையில்,

சமாதானப் பேச்சுவார்த்தையில் எல்லாச் சமூகத்தவருக்கும் நீதி கிடைக்க வேண்டுமென்பதே, சர்வதேச சமூகத்தின் நோக்கமாகும். ஒரு இனத்திற்கு மட்டும் தீர்வை வழங்கிவிட்டு மற்றைய இனத்தைப் புறந்தள்ளும் நிலை ஏற்படாது. (10 ஆம் பக்கம் பார்க்க)



அம்பாறைக்கு நேற்று விஜயம்செய்த ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி, தூதுவர் ஒட்சுகா உள்ளிட்ட குழுவினரை அமைச்சர் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு ஆகியோர் வரவேற்று அழைத்துச்செல்கிறார்கள்.

## பாகிஸ்தான் ஜெனரல் கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

பாகிஸ்தான் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமை அதிகாரிகளின் தலைவரான ஜெனரல் மொகமட் ஏகான் இன்று கொழும்பு வருகிறார்.

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டே கொழும்பு வருவதாக இராணுவத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

# கிளிநொச்சிக்கு இன்று வரும் அகாஷி தமிழ்ச்செல்வனுடன் முக்கிய சந்திப்பு!

## இடைக்கால நிர்வாகம் குறித்தும் பேச்சு நடத்துவார்

(கொழும்பு)

**ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி முக்கிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக, இன்று காலை கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.**

**விமானப்படையின் ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சி வரும் யசூஷி அகாஷி, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து, முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதாக ஜப்பானியத் தூதரக் வட்டாரங்கள் தெரிவித்தன.**

இந்தச் சந்திப்பில், தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பித்தல், ரோக்கியோ நிதியுதவி மாநாட்டில் ஒதுக்கப்பட்ட நிதியுதவிகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட,அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் பேசப்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், அரசாங்கத்திடம் கையளிப்பதற்காக புலிகள் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு குறித்தும் தமிழ்ச்செல்வனுடனான இந்தச் சந்திப்பில், ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி ஆராயவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்றைய சந்திப்பின்போது - கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ரோக்கியோ உதவிவழங்கும் மாநாட்டின் தொடர்ச்சியான கூட்டத்தில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாதது குறித்தும், அதற்கான காரணங்கள் குறித்தும், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் - ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷிக்கு விரிவாக விளக்கிக்கூறுவார் எனவும் தெரியவருகிறது.

## முறிகண்டியில் வீதி விபத்து; ஒருவர் பலி, இருவர் காயம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - முறிகண்டிப் பகுதியில், நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று பிற்பகல் 3.10 மணியளவில் வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மண் பறிக்கும் வாகனம் ஒன்றின் மீது, வேகமாக வந்த லொறி ஒன்று மோதியுள்ளது. இதனால், மண் பறிக்கும் வாகனத்துக்கு எதிரே நின்ற உழவு இயந்திரத்தில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் செல்வநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த 55 வயதுடைய காசிநாதர் இராசையா என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டபோது உயிரிழந்தார்.

விபத்தில் காயமடைந்த ஏனைய இருவரில் ஒருவர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டார்.

## இராணுவ கவச வாகனம் மோதி குடும்பஸ்தர் பரிதாபமாக மரணம்!

(நெல்லியடி)

இராணுவ புலன் கவச வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர்

## வடக்கு - கிழக்கைப் பிரிக்கக்கோரி கொழும்பில் நாளை எதிர்ப்புப் பேரணி!

# இராணுவ கவச வாகனம் மோதி குடும்பஸ்தர் பரிதாபமாக மரணம்!

(நெல்லியடி)

இராணுவ பவள் கவச வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம், நேற்று மாலை 5 மணியளவில் நெல்லியடி பொதுச்சந்தைக்கு அண்மையில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில், உடுப்பிட்டி - நவிண்டிலைச் சேர்ந்த பஞ்சாட்சரம் (செட்டி - வயது 63) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந் தவராவார்.

நேற்று மாலை பழைய பொருட்களைச் சேகரித்துக் கொண்டு சைக்கிளில் வந்துகொண்டிருந்த இவர், பவள் கவசவாகத்தின் சில்லினுள் அகப்பட்டு - நசியுண்டு சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

இவரது சடலம், மரணவிசாரணைகளின் பொருட்டு மந்திகை மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான கவச வாகனம் சம்பவம் நடைபெற்ற இடத்தி லிருந்து நெல்லியடி பொலிஸாரினால் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

தும் பேசப்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித் தன.

திகள் தெரிவிக்கின்றன.

இன்றைய சந்திப்பின்போது - கொழும்பில் நேற்றுமுன்தினம் நடை

பானிய விசேட தூதுவர் அகாஷிக்கு விரிவாக விளக்கிக்கூறுவார் எனவும் தெரியவருகிறது.

# வடக்கு - கிழக்கைப் பிரிக்கக்கோரி கொழும்பில் நாளை எதிர்ப்புப் பேரணி!

வடக்கு - கிழக்கை தனித்தனி மாகாண அலகுகளாகப் பிரித்து அதற்குத் தனித்தனி ஆளுநர்களை நியமிக்கக்கோரி, நாளை கொழும் பில் எதிர்ப்புப் பேரணியொன்று நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கைப் பாதுகாக் கும் சிங்கள அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்தப் பேரணி, கோட்டை ரயில்நிலையத்திலிருந்து ஆரம் பமாகி - ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை ஆகியவற்றுக்குச் சென்று, ஒரு லட்சம் பேர் கையெ ழுத்திட்ட மகஜர்கள் கையளிக்கப் படவுள்ளன.

இந்த எதிர்ப்புப் பேரணியில் கலந்து கொள்வதற்காக - அம்பாறை, திரு கோணமலை ஆகிய மாவட்டங்களி லிருந்து சிங்கள மக்கள் கொழும்பு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

ஏற்கனவே இந்த அமைப்பு - திருகோணமலை, அம்பாறை மாவட் டங்களில் இந்தக் கோரிக்கையை முன்வைத்து எதிர்ப்புப் பேரணிகளை நடத்தியுள்ளது.

இதன்பின்னர் - சிங்களக் கிரா மங்களில், ஒரு லட்சம் கையெழுத் துப் பெறும் நடவடிக்கையிலும் ஈடு பட்டிருந்தது. இதன்போது, சேகரிக் கப்பட்ட ஒரு லட்சம் பேரின் கையெ ழுத்தடங்கிய மகஜரையே இந்த அமைப்பு கையளிக்கவுள்ளது. (01)

# வடக்கு - கிழக்கை மீளவும் கட்டியெழுப்புவதற்கு அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாகம் தேவை!

## ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷியிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

போரால் பாதிக்கப்பட்டு சீரழிந்து போயுள்ள வடக்கு - கிழக்கை மீளக் கட்டியெழுப்ப போதிய அதிகாரங் களைக் கொண்ட இடைக்கால நிர் வாகக் கட்டமைப்பு அவசியமென, ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷியிடம் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறிய மக்களுக்கு நிவாரணங் களையும், ஏனைய தேவைகளையும் உடனடியாக வழங்காத பட்சத்தில், அவர்கள் பெரும் ஏமாற்றமடைவார் கள் என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தலைமையி லான பிரதிநிதிகள் யசுஷி அகா ஷியிடம் எடுத்துக் கூறினர்.

இதேவேளை - அவர்களது எதிர் பார்ப்புகள் நிறைவேற்றப்படாத பட் சத்தில், தற்போதைய சமாதான முயற்சிகளை எதிர்மாறான கண் கொண்டு அவர்கள் பார்க்கநேரிடும் என்றும் கூட்டமைப்பினர் சுட்டிக்காட் டினர். ஜப்பான் தூதுவரின் உத்தி யோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு நடை பெற்றது.

# கண்காணிப்புக்குழு - புலிகள் செவ்வாயன்று விசேட சந்திப்பு!

(கொழும்பு)

கிண்ணியா - குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாக விடுதலைப் புலி களுக்கும் போர்நிறுத்த கண்காணிப் புக்குழுவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று எதிர்வரும் செவ்வாய்க் கிழமை கிளிநொச்சியில் இடம்பெற வுள்ளதாக போர்நிறுத்தக் கண்கா ணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன் தலை மையிலான குழுவினர் இந்தச் பேச் சுக்களில் கலந்துகொள்வர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி செல்லும் இவர்கள், விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல வன் தலைமையிலான குழுவினரைச் சந்திப்பர் என்றும் -

இந்தச் சந்திப்பின்போது தற் போதைய நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப்படும் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடோட் ரயர் மேலும் தெரிவித்தார்.


EXPOAIR
your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226247
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.



எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1139)

# சமாதான நீதிவான்களாக நியமனம் பெற்றோர்கள்



தொண்டமனாற்றைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை இராசரத்தினம் சண்முகலிங்கம் (பவுண் ஐயா) அவர்கள் அண்மையில் யாழ்.மாவட்ட நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கை சாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாவார். இவர் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் கப்பலோட்டிய எஸ்.வீரகத்திப்பிள்ளையின் பேரனாவார். இவர் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினதும், தொண்டமனாறு பிள்ளையார் கோவில் திருப்பணி சபையினதும், தொண்டமனாறு நற்பணி மன்றத்தினதும் தலைவராகவும், தொண்டமனாறு விநாயகர் சனசமூக நிலையத்தினதும், தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் போஷகராகவும் உள்ளார்.



துன்னாலை வடக்கு - புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் பிரதமகுரு - பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சன குருக்கள் அண்மையில் நீதியமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர், யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.



உடுப்பிட்டியைச் சேர்ந்த கே.குணசிங்கம் அண்மையில் சமாதான நீதிவானாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்.மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் வடமராட்சி கல்வி வலய தொழில் முன்னிலை பாட ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றியவராவார்.



கரவெட்டியைச் சேர்ந்த ஆழ்வார் கந்தசாமி யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில், இலங்கைக்கான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்துஊழியர் சங்கத்தின் பொருளாளரும், போக்குவரத்து சபைக் களஞ்சியப் பொறுப்பாளருமாவார்.

## சிறு செய்திகள்

### கரவெட்டியில் நல்லின சினைப்படுத்தல்

(நவிண்டில்)

நாவலர் மடத்திற்கு அருகிலுள்ள கரவெட்டி அரச கால்நடை வைத்தியசாலையில், ஆடுகளுக்கு- ஜமுனா பாரி கலப்பினங்களையும், சன்னான் இணங்களையும், மாடுகளுக்கு- ஐரோப்பிய தஸ்பினமும் சினைப்படுத்தி, நல்லின ஆடு, மாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்புவோர் - கரவெட்டி அரச கால்நடை வைத்திய அதிகாரி ம.சறோஜினிதேவியுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (116)

### மகாகவி பாரதிக்கு விழா

யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றத்தினர் நடாத்தும், மகாகவி பாரதியார் விழா - அண்மையில் யாழ்ப்பாண பட்டப்படிப்புக்கள் பிரிவில் நடைபெற்றது.

தமிழ் மன்றத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.


சிறு விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

18 பனை மரங்களுடன் கைதடி மத்தியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும், விவசாயம் செய்வதற்கும் உகந்தது. உடன் தொடர்பு கொள்ளவும்.

க.சசிகலா, நீர்வேலி வீதி, கைதடி வடக்கு, கைதடி. (சி-1527)




பருத்தித்துறை திருச்சபை மண்டபம் புனரமைக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் - பருத்தித்துறை போதகர் அருட்திரு சதீன் அடிகளார் உரையாற்றுதையும், இலங்கை திருச்சபை தலைவர் அருட்திரு நோயல் பி.பெர்னாண்டோ உட்பட கலந்து கொண்டோரைப் படத்தில் காணலாம். (17)



கரவெட்டி பிரதேசசபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கலைவிழாவில், பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் ஏ.நடராசா உரை நிகழ்த்துவதையும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.ரி.கிருஷ்ணசாமி, கரவெட்டி உதவி பிரதேச செயலர் வி.வீரபத்திரபிள்ளை, ஆ.சிவபுண்ணியம், விழாத்தலைவர் எஸ்.பசுபதி ஆகியோரைப் படத்தில் காணலாம். (17)


நிறஞ்சனாஸ் சங்கானை

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா நடித்த

ராமன் தேடிய சீதை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

WISH MASTER

(கராட்டிப்படம்)

(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

நாளை

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

நாளை முதல்

அன்பு

(சி-1424)

தேவை

**வேப்பம் விதை தேவை**

வேப்பெண்ணெயில் தயாரிக்கப்பெற்ற "நீம்" சோப் ஒன்றின் விலை 16 ரூபா மட்டுமே. 10 நீம் சோப் மேலுறைகளுக்கு அழகிய பொலித்தீன் பாக் இனாம்.

மில்க்வைற்.
த.பெ.இல 77.
யாழ்ப்பாணம்.

(சி-1475)

ஓவ் (f) செற் முறையில் அச்சுப் பதித்து இப்போது உங்கள் தேவையை, தங்கள் சேவையாக கருதி ~ தரமாக, நேர்த்தியாக என்றும் தெளிவாகப் பார்க்க, பாதுகாக்க அச்சுப் பதித்துத் தருகிறார்கள்

சுரபி பதிப்பகத்தினர்

பத்திரிகைகள்
மலர்கள்
சஞ்சிகைகள்
பெரிய அளவிலான போஸ்ரர்கள்
துண்டுப் பிரசுரங்கள்
வைபவ அழைப்பிதழ்கள்
சமய சந்நிதான விழாக்கால போஸ்ரர்கள்

உங்கள் தேவை எதுவானாலும் நிறைவுடன் பெற்றுக்கொள்ள ஒருமுறை சுரபியை நாடுங்கள்.

குறைந்த கட்டணம்
குறுகிய தவணை

உங்கள் ஆக்கங்கள் உங்கள் வெளியீடுகள்
உங்கள் எண்ணக்கிடக்கைகள்
உங்கள் கற்பனை வளங்கள்

இவற்றிற்கு செயல் வடிவம்தான் சுரபியின் நேர்த்தியான கணினி தட்டெழுத்து அமைப்பும், தெளிவான அச்சுப்பதிப்பும்.

உங்கள் தெரிவு என்றும் ஒரே தெரிவாக இருக்கட்டும்.
அதுவே சுரபியாக இருக்கட்டும்.

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி
2223922
2225107

### ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர்களின்
# ஒழுக்க விதிகளை ஆராய்வதற்கு விசேட குழு அமைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களின் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாக ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்கும் முகமாக, விசேட குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக அமைச்சரவையின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்தக் கட்சியில் அங்கம்வகிக்கும் உறுப்பினர்களின் ஒழுக்க விழுமியங்களைப் பேணும் முகமாக, இவ்வாறானதொரு குழுவை நியமிப்பதென கடந்த 8 ஆம் திகதி கூடிய ஐக்கிய தேசிய முன்னணியின் உயர்பீடம் தீர்மானித்தது என, அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்க தகவல்கள் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின்குழு உறுப்பினர்களுக்கான ஒழுக்க நெறிக்கோவை ஒன்றை செயற்படுத்துவது தொடர்பாக, சகல அரசியற்கட்சிகளினதும் அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த ஒழுக்க நெறிக்கோவையில் உள்ளடக்கப்படவேண்டிய அம்சங்கள் குறித்து, உயர்மட்ட அறிஞர்கள் கொண்டகுழு ஒன்று ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

# காணி அமைச்சுக்கு புதிய இணையத்தளம்

(கொழும்பு)

காணி உரிமை மற்றும் அது தொடர்பாக, சேவைகள் திட்டங்களின் தகவல்களை மக்கள் அறிந்துகொள்வதற்காக, காணி அமைச்சினால் இணையத்தளமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காணி அமைச்சர் ராஜித சேனரத்னவினால், கொழும்பு டிரான்ஸ் ஏசியா ஹோட்டலில் நடந்த வைபவத்தில், இது உத்தியோ கபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த இணையத்தளத்தின் மூலம், காணி தொடர்பான சகல தரவுகளையும் பெற்றுக்கொள்ளமுடியும். காணி அமைச்சு, நிலம் சீர்திருத்த ஆணைக்குழு, நில அளவைத் திணைக்களம் போன்றவற்றின் தரவுகளோடு, அரச காணிகள் தொடர்பாக விரிவான தகவல்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. **www itrsp.slt.ik** என்ற இணையத்தள முகவரியூடாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

### தேசிய எழுச்சிப் பேரவை சங்கமம்

(நெல்லியடி)

கரவெட்டிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கமம் இன்று காலை 10.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார்.

# உல்லாசப் பயணிகள் நிலையமாக இலங்கையும் மாற்றப்படவுள்ளது!

### அமைச்சர் ரஞ்சித் மத்துகம

(கொழும்பு)

இலங்கையை வெளிநாட்டார் கவரும்படியாக, 2010 ஆம் ஆண்டளவில் உல்லாசப் பயணிகளின் கேந்திர நிலையமாக, இலங்கையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, உல்லாசப்பயண அபிவிருத்தி அமைச்சர் ரஞ்சித் மத்துகம பண்டார தெரிவித்தார்.

இதன்மூலமாக உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வடமேல் மாகாணத்தில் மிகக்குறுகிய காலத்தில் உல்லாசப் பயணத் துறையை 'விருத்தி செய்வதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் பற்றிய தகவல்களை சேகரித்து, கூடிய விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

# உள்ளூராட்சிசபை உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்க நடவடிக்கை

உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் தங்கள் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இலகுவாக, அனைவருக்கும் மோட்டார் சைக்கிள்களை வழங்க, மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலிக் அலுவிகார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இந்தத்திட்டம் முதலாவதாக வடமேல்மாகாணத்தில் - குருநாகல், புத்தளம் மாவட்டங்களிலும், மத்திய மாகாணத்தில் - கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

தேசிய அபிவிருத்தி கடன் நிதியத்திலிருந்து பெறப்படும் பணத்தின் மூலம் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு, மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கொள்வனவு செய்ய வழங்கப்படவுள்ள 75 ஆயிரம் ரூபா, 30 தவணைகளில் அவர்களின் கொடுப்பனவிலிருந்து மீளப்பெறப்படும்.

அனைத்திலங்கை உள்ளூராட்சிச்சபைத் திணைக்களத் தலைவர்களின் சங்கம் - அமைச்சர் அலிக் அலுவிகா ரவிடம் அது தொடர்பாகக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இந்தத்திட்டத்தை அவர் நடைமுறைப் படுத்துவதாகத் தெரிவித்தார்.

# சம்மாந்துறை முஸ்லிம் விவசாயிகள் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறையில், முஸ்லிம் விவசாயிகள் - அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் ஜிம்மா தொழுகையை அடுத்து, சம்மாந்துறை ஹிஜிரா சந்தியிலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

அம்பாறை மாவட்டத்தில் அரசினால் கொள்வனவு செய்யப்படும் நெல்லுக்கான கொள்வனவுப் பணத்தினைக் கூடுதலாக ஒதுக்கக்கோரியும், கிருமிநாசினிகளின் விலையைக் குறைக்கச் சொல்லியும், பசளைகள் மீதான அரசின் வற் வரியினை நீக்குதல், விவசாயக் கடன்களுக்கான வட்டி வீதங்களைக் குறைக்கவும் கோரியே, இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அத்துடன் சம்மாந்துறைப் பிரதேச செயலரிடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மகஜர் ஒன்று, விவசாயிகளால் கையளிக்கப்பட்டது. இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக, பிரதமர் ஆக்கபூர்வமான பதில் எதுவும் தராதபட்சத்தில், தாம் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளமாட்டோம் என விவசாயிகள் தெரிவித்தனர். (07)



கொழும்பில் நடைபெற்ற ரோக்கியோ உதவி மாநாட்டின் தொடர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய யசுஷி அகாஷியையும் மற்றும் பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

### திருமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு
# படையினரை ஏற்றி இறக்குவதற்கு வாடகைக்கு கப்பல் அமர்த்த முடிவு

காங்கேசன்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையில் படையினரை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபடுத்துவதற்காக, கடற்படை புதியதொரு பயணிகள் போக்குவரத்துக் கப்பலை வாடகைக்கு அமர்த்தத் தீர்மானித்துள்ளதாக, கடற்படைத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபகுதியில் பணியாற்றும் படையினரை ஏற்றியிறக்கும் பணிக்காக, வாடகைக்கு அமர்த்தப்படவுள்ள கப்பலுக்கான கேள்விப்பத்திரங்களை- கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி கோரியுள்ளார்.

புதிதாக வாடகைக்கு அமர்த்தப்படவுள்ள கப்பல் - 1400 மணித்தியாலங்களுக்கு சேவையில் ஈடுபடவேண்டும் எனவும், 500 பயணிகளை ஏற்றும் வசதிகளைச் செய்துகொண்டதாகவும், 20 கடல்மைல் வேகத்தில் செல்லவேண்டும் என்றும், கேள்விப்பத்திரத்தில் கோரப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பாக முத்தரப்பு பேச்சுக்கு புலிகள் இணக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்களில், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் முஸ்லிம் வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக - முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்வதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்தைச் சேர்ந்த பியர், கண்காணிப்புக்குழுவின் அரச தரப்புப் பிரதிநிதி எஸ்.எம்.இசவீன் ஆகியோர் இந்தப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் - தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர்கள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோரை விரைவில் சந்தித்து, இதுபற்றி ஆராய இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பத்து கோரிக்கைகளை முன்வைத்து ஜனாதிபதிக்கு சிங்கள அமைப்பு கடிதம்

வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு பத்து கோரிக்கைகளை முன்வைத்து, ஜனாதிபதிக்கு மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

வடக்கு -கிழக்கைத் தனித்தனியான ஆளுநர்களுக்குக் கீழ்க்கொண்டு வருதல், விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கில் கப்பம் பெறுதலைத் தடுப்பது, புலிகள் -இளம் சிறுவர்களைக் கடத்துவது, அரசியற்கட்சிகளின் பாதுகாப்பை வடக்கு -கிழக்கில் உறுதிசெய்வது, புலனாய்வுப் பிரிவினரின் கொலைகளைத் தடுப்பது சம்பந்தமாகவே ஜனாதிபதிக்கு அந்த அமைப்பு முறைப்பாடு செய்துள்ளது.

அத்தோடு, வடக்கு-கிழக்கில் உயர்பாதுகாப்பு வலயத்தைத் தொடரச் செய்வது, இலங்கை கடற்படை - இந்திய கடற்படையோடு இணைந்து செயற்படுவது, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் இந்தியாவையும் இணைப்பது போன்ற விடயங்களும், அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு சார்பாக கொழும்பில் இன்று மாலை 2.30 மணிக்கு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம் பெறவுள்ளது.

# ஹேர்குலிஸ் போக்குவரத்து விமானம் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படும்!

விமானப்படைக்குச் சொந்தமான ஹேர்குலிஸ் சி 130 ரக இராட்சத போக்குவரத்து விமானம் முற்றுமுழுதான பழுது பார்த்தலுக்குப் பின்னர், இந்தமாத இறுதிக்குள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தக்கூடியதாக இருக்கும் என்று, விமானப்படைத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

லொக்ஹீட் நிறுவனத்திடம் விமானப்படை கொள்ளவனவு செய்திருந்த இந்த விமானம், பழுதடைந்ததால் திருத்தப்பணிக்காக மலேசியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அங்கு அந்த விமானம் முற்று முழுதாகப் பாகம் பிரிக்கப்பட்டுப் பழுது பார்க்கப்பட்டது.

திருத்தப்பணிகள் தற்போது முடிவடையும் நிலையை அடைந்திருப்பதால், இந்த மாத இறுதிக்குள் விமானம் கொழும்புக்குக் கொண்டுவந்து சேவையில் ஈடுபடுத்தப்படக்கூடியதாக இருக்கும் என, விமானப்படை அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, திருத்தவேலைகள் முடிக்கப்பட்ட இந்த விமானத்தில், இயங்குதிறன் அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும், தற்போது இது கூடிய செயற்திறனுடன் இயங்கக்கூடியதாக இருக்கும் என்றும், விமானப்படை அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இந்த விமானத்தைச் சேவையில் ஈடுபடுத்தக்கூடியநிலை ஏற்பட்டாலும்- வடபகுதிக்கும், இரத்மலானைக்கும் இடையிலான இராணுவ விநியோகங்கள் பெரிதும் முன்னேற்றம் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நம்பிக்கைக்குரிய உறுப்பினர்களை அழைத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, தனக்கு விருப்பமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இருதினங்கள் இரகசிய பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் கடந்த 10 ஆம் திகதி இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது. ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரிய லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா உட்பட, பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் தேர்தலில் முகங்கொடுப்பது எவ்வாறு என்பது பற்றியும், தேர்தல் மாவட்டங்களில் தேர்தல் சம்பந்தமான முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்வதென்றும், ஜே.வி.பி- சுதந்திரக்கட்சிக் கூட்டுக் குழம்பியது பற்றியும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# காட்சி உதைபந்தாட்டப் போட்டிகள் வதிரியில் இன்று நடைபெறுகின்றது

மாவீரர் நினைவாகப் பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் நடாத்தும், யாழ்.மாவட்ட அணிகளுக்கிடையிலான இறுதியாட்டமும், காட்சி உதைப் பந்தாட்டப் போட்டியும் இன்று வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும்.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கும் காட்சிப்போட்டியில், வன்னி மாவட்டத்தை எதிர்த்து, வடமராட்சி வீரர்களும் -

பிற்பகல் 4 மணிக்கு மாவீரர் நினைவு இறுதிப்போட்டியில், கொற்றாவத்தை சிவா[illegible]ந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, இளவாலை சென்.கென்றீஸ் விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன. (116)

## அரசியற்துறை சார்ந்த

# பட்டப்பின் படிப்பு கற்கைநெறி

# தொழில்நுட்பக் கல்லூரியில்

தேசிய அரசியல் அறிவுக் கல்வி நிலையத்தின் அனுசரணையோடு, யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி - அரசியற்துறை சம்பந்தப்பட்ட பட்டப்பின்படிப்பு கற்கைநெறியை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் பட்டப்பின் படிப்பின்போது- தலைமைத்துவம், உள்ளூர்- சர்வதேச அரசியல் தன்மைகள், ஜனநாயகம், மனித உரிமைகள், திறந்த பொருளாதாரம் என்னும் விடயங்கள் போதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கற்கைநெறி தொடர்பான விளக்கக் கருத்தரங்குகள் - எதிர்வரும் 1, 2 ஆம் திகதி, யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக, தொழில்நுட்பக் கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதிகள் வழங்கப்படவுள்ளமையால், எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

முழுநாள் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் பங்குபெறுவோருக்காக - உணவு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறிக்கான சான்றிதழ்கள் - தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### திருத்தப்படாத வீதி

புங்கங்குளம் வீதி, குருவித்தோட்ட வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு, அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக இந்த வீதி திருத்தப்படாமல் இருப்பதால், குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதெனக் குறிப்பிட்டே-இந்த வீதியைத் திருத்தம் செய்து தருமாறு கோரியுள்ளனர். (119)



அண்மையில் பாசையூர் இளைஞர் கழகத்துக்கு கணினி ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.



நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி - சுன்னாகம் கிளையில் வாடிக்கையாளர்கள், தமது கணக்குகளை ஆரம்பிப்பதைப் படத்தில் காணலாம்.

# தரைவழியாக கடலுணவுகள் குடாநாட்டிலிருந்து ஏற்றுமதி

யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்படும் இறால்களை, வடமாகாண மீனவர் சமாசம் கொள்வனவு செய்து, ஏற்றுமதி செய்து வருகின்றது.

இதன்படி கூடுதலாக இறால் பிடிக்கப்படும் நாட்களில், 1,500 கிலோ இறாலையும், மற்றைய நாட்களில் அதற்குக் குறைவாகவும் பதனிடப்பட்டு, கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டபின், யாழ்.குடாநாட்டிலிருந்து தரைவழியாகக் கடலுணவுகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன்மூலம், மீனவர்கள் கூடுதலான இலாபமடைகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முகமாலையில் படையினரால் அடையாள அட்டை பறிப்பு!

(யாழ்ப்பாணம்)

முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து, பயணி ஒருவரிடம் அடையாள அட்டை இராணுவத்தினரால் பறிக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பாக, மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் விசுவமடுவிலிருந்து வந்த சிவகுரு குகானந்தராஜா (வயது 28) என்பவரது அடையாள அட்டையே இவ்வாறு பறிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் குறிப்பிட்ட நபர் - மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றினைச் செய்துள்ளார்.

மேற்படி நபர் புத்தூரில் தனது தாயினைப் பார்வையிடுவதற்காக வந்தபோதே, அவர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எனக்கூறி, இராணுவத்தினர் அடையாள அட்டையைப் பறித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வடமாகாண ஆசிரியர் சங்க விசேட நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் விசேட நிர்வாகசபைக் கூட்டம்- இன்று காலை 10.30 மணிக்குச் சங்க அலுவலகத்தில் தலைவர் சா.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஆளுநர், மாகாணக் கல்விச் செயலாளர், பிரதம கணக்காளர் ஆகியோருடன் நடைபெறும் கலந்துரையாடலில் சமர்ப்பிக்க வேண்டிய கோரிக்கைகள் பற்றித் தீர்மானிக்க வேண்டியுள்ளதால், சகல நிர்வாக சபை உறுப்பினர்களையும், அங்கத்தவர்களிடமிருந்து பெற்ற முறைப்பாடுகள் அடங்கிய கடிதங்களையும் எடுத்து வருமாறு செயலாளர் கோரியுள்ளார்.

உள்வாங்கல், ஓய்வூதியம் சேவையிலிருந்து பட்டதாரிகளான ஆசிரியர்களின் பிரச்சினை, இடமாற்றம் போன்ற பிரச்சினைகள் உள்ள ஆசிரியர்கள் - சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் சங்க அலுவலகத்தில் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

1998 ஆம் ஆண்டு நியமனம் பெற்று, பயிற்சிக்காலச் சம்பளம் பெறாத தென்மராட்சி ஆசிரியர்கள்- தமது விபரங்களை, இந்த நாட்களில் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### பூவக்கரை வீதி புனரமைப்பு

(நவிண்டில்)

பன்முகப்படுத்தப்பட்ட வர்வு- செலவுத்திட்ட நிதியின்கீழ், வதிரி பூவக்கரை வீதி புனரமைக்கப்பட்டுள்ளதாக, விசேட ஆணையாளர் சி.பசுபதி தெரிவித்தார்.

இந்த வீதிக்கு ரூபா 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத இந்த வீதி, புனரமைக்கப்பட்டு வருவதையிட்டு அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (116)

# சிறுவர் தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டிக்கு ஏற்பாடு!

(மானிப்பாய்)

சிறுவர் தினத்தினை முன்னிட்டு, வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பணிப்பாளரின் அனுசரணையுடன், பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியினை நடத்தவுள்ளது.

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 13 வரையிலான சகல பாடசாலை மாணவர்களும் பங்குகொள்ளக் கூடிய முறையில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## கண்டெடுக்கப்பட்ட

# அடையாள அட்டைகள் பொலிஸ் நிலையத்தில்

(யாழ்ப்பாணம்)

தவறவிடப்பட்ட அடையாள அட்டைகளின் ஒருதொகுதி - யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றை உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு, யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் கேட்டுள்ளன. அடையாள அட்டைகளுக்கு உரியவர்க ளின் பெயர் விபரம் வருமாறு-

தர்மராஜா நிலோஜன் (கொக்குவில்), சிவஞானம் தனலட்சுமி (வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்), சீவரத்தினம் மணிபல்லவன் (கொட்டடி, யாழ்ப்பாணம்), குமரேசு பொன்னையா கனகலிங்கம் (கொட்டடி, யாழ்ப்பாணம்), நாகரத்தினம் ஆறுமுகசாமி (பிரான்பற்று), கந்தையா சந்திரசேகரா (யாழ்ப்பாணம்), தர்மலிங்கம் ரத்தினராசா (புங்குடுதீவு), சரவணமுத்து கனகசபை (மல்லாகம்), பொன்னையா கவிதா (பளை), சிற்றம்பலம் நல்லம்மா (புலோலி), அருளம்பலம் சிவபாலன் (மூளாய்)

**விசேட அடையாள அட்டைகள்**

சிவக்கொழுந்து நாகராசா (மட்டுவில்), சின்னையா நாகரத்தினம் (நல்லூர்), சின்னராசா சதீஸ்வரன் (வண்ணார்பண்ணை), சிற்றம்பலம் நல்லம்மா (புலோலி), சின்னத்தம்பி சுதாகரன் (ஓட்டுமடம்), விசுவநாதர் தணிகாசலம் (புத்தூர்), சிவநாதன் சந்திரவதனன் (யாழ்ப்பாணம்).

### இருபது வருடமாக திருத்தப்படாத வீதி

(மானிப்பாய்)

நவாலி வடக்கு - நாச்சிமார் வீதி, தலுவில் வீதி என்பன கடந்த இருபது வருடகாலமாகத் திருத்தப்படவில்லையெனப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு வீதிகளையும் திருத்தக்கோரி, பல தடவைகள் மானிப்பாய் பிரதேசசபையிடம் முறையிட்டு, பலன் ஏதும் ஏற்படாததையிட்டு, அப்பகுதி மக்களால் மீண்டும் கையொப்பம் இட்ட கடிதம் - பிரதேசசபையின் செயலாளர் பி.விக்ரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (100)

### ஆசிரியர்களுக்கான பட்சை வழிகாட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் -விருப்பத்திற்குரிய பாடமாக தமிழ் இலக்கியத்தைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் தொடர்பான செயலமர்வு - நாளை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலுள்ள வலய மூலவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் தமிழ் இலக்கியத்தைப் போதிக்கும் ஆசிரியர்களைத் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில், விருப்பத்திற்குரிய தமிழ் இலக்கிய பாடத்தை கற்கும் மாணவர் விபரத்தையும், பாடநூல் குறிப்புக்களையும் எடுத்துவரும்படி, தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.ஸ்ரீதயாளன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மாவட்ட துடுப்பாட்ட வீரர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் அனுசரணையுடன், வட மத்திய மாகாண கிரிக்கெட் சங்கம்- மாவட்டங்களுக்கிடையிலான 16 வயதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்ட சுற்றுப்போட்டியொன்றினை எதிர்வரும் 22 ஆம் திகதி மாத்தளையில் நடத்தவுள்ளது.

மாவட்ட அணி தெரிவுக்காக ஒவ்வொரு பாடசாலைகளிலுமிருந்து சிறந்த வீரர்களை, அவர்களது பெறுபேறுகளுடன் இன்று மாலை 4.30 மணிக்கு, யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி யாழ். மாவட்ட அணி- எதிர்வரும் 20 ஆம் திகதி மன்னார் மாவட்ட அணியுடனும், 25 ஆம் திகதி வவுனியா மாவட்ட அணியுடனும், 26 ஆம் திகதி திருகோணமலை மாவட்ட அணியுடனும் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளது.

### சாவற்கட்டு முன்பள்ளிகளுக்கு சத்துணவு

சாவற்கட்டுப் பகுதியிலுள்ள மக்களின் போஷாக்கின்மையைப் போக்க, சாவற்கட்டு சாரதா விதவைகள் மையம் மேற்பார்வையில் - கியுடெக் நிறுவனம் சத்துணவு வழங்கி வருகிறது.

இந்தச் சத்துணவானது, சாவற்கட்டிலுள்ள மூன்று முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இந்தச் செயற்பாட்டினால், முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெறுவதுடன், பெற்றோர்களின் பூரண ஒத்துழைப்பும் பெறக்கூடியதாகவுள்ளது. (91)

# 'சங்ஸ்தா' உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில்; உடுப்பிட்டி, தேவரையாளி பாடசாலை அணிகள்!

(நவிண்டில்)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற 'சங்ஸ்தா' உதைபந்தாட்ட அரையிறுதிச் சுற்றுப்போட்டியில் - கொற்றாவத்தை அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தை - தேவரையாளி இந்துக் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கிலும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியை - உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றுள்ளன.

இதனடிப்படையில், 14 பாடசாலைகள் பங்குபற்றிய 13 வயதிற்கு உட்பட்ட 'சங்ஸ்தா' உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் - தேவரையாளி இந்துக் கல்லூரியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் முதலாம், இரண்டாம் இடங்களுக்காக விளையாடவுள்ளன.

மூன்றாம், நான்காம் இடங்களுக்கான போட்டியில் -

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியும், கொற்றாவத்தை அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயமும் எதிர் கொள்ளவுள்ளனவென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (116)

# விளையாட்டு அரங்கம்

## இன்றைய முதல்வன்

டேவ் வட்மோர் இலங்கைக்கு வேண்டாதவராகி, பங்களாதேஷ் அணிக்குத் தேவைப்பட்ட போது, வட்மோர் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடவில்லை. டெஸ்ட் தரத்தில் மிகவும் தாழ்ந்துபோயிருந்த அணியைப் பயிற்றுவிக்கும் பாரிய பொறுப்பு, தனது திறமைக்குச் சோதனையாக இருந்துவிடுமோ என்றும் பயப்படவில்லை.



அதேவேளை, வேறு அணிகளைப் பயிற்றுவிக்கும் அழைப்புகள் ஏதும் இல்லாமல், பங்களாதேஷுக்குப் போனவரும் அல்ல. ஏனெனில், கிரிக்கெட் பயிற்றுநர் என்ற வகையில், அவரது கையில் ஏதோ ஒரு மந்திரக்கோல் இருக்கிறது என்பது உண்மை.

இலங்கை அணி - 1996 இல் உலகக் கிண்ணத்தைப் பெறுமளவுககுத் துரித கதியில் வளர்த்தெடுத்ததில், வட்மோரின் பங்கு எந்தளவென்பதைக் கிரிக்கெட் ரசிகர்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

இதன்பின் 1997 இல் வேண்டப்படாத வராகி, மீண்டும் இந்த வருட உலகக் கிண்ணப்போட்டிகளின்போது, இலங்கை அணியின் பயிற்றுநரானார். ஆனால், 1996 இன் சாதனையை, 2003 இல் காட்ட முடியவில்லைத்தான். இதற்கு முன்னதாக வட்மோர், இங்கிலாந்தின் லங்காஷயர் கவுன்ரி அணியின் பயிற்றுநராக நியமிக்கப்பட்டார். நெட்வெஸ்ட் கிண்ணம், சண்டேலீக் கிண்ணம் இரண்டையும், லங்காஷயர்-வட்மோரின் பயிற்றுநர் காலத்தில் சுவீகரித்துக் கொண்டது. சாம்பியன்ஷிப் போட்டிகளில் இரண்டாம் இடம் பெற்றுக்கொண்டது.

வட்மோர் பங்களாதேஷ் அணியின் பயிற்றுநராகப் பதவியேற்றபின், அவுஸ்திரேலிய் சுற்றுப்பயணம் மற்றும் பாகிஸ்தானில் மூன்று டெஸ்ட் போட்டிகள் என்று சந்தித்து, தோல்வியைத்தான் சந்தித்திருக்கிறார்கள்.

ஆனால், இந்தத் தோல்விகளுக்கு அப்பால், பங்களாதேஷ் வளர்ந்திருக்கிறதா என்றால், நடுநிலை விமர்சகர்கள் வட்மோருக்கும், பங்களாதேஷ் அணிக்கும் சபாஷ் போடுகிறார்கள். ஏனெனில், தற்போது பங்களாதேஷ் அணி தன்னால் இயன்றளவு உக்கிர போட்டியை எதிரணிக்குக் கொடுக்கத் தொடங்கியுள்ளது. இதற்குச் சான்றாகப் பாகிஸ்தானுடன் விளையாடிய மூன்று டெஸ்ட் ஆட்டங்களையும் குறிப்பிடலாம். அதிலும், இரண்டாவது டெஸ்டில் ஓரளவு வெற்றிவாய்ப்பைச் சந்தித்த பங்களாதேஷ், மூன்றாவது டெஸ்டில் பாகிஸ்தானைக் கவிழ்த்தேவிட்டது என்றே தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இன்சமாம் உல் ஹக்கின் 88 டெஸ்ட் ஆட்ட அனுபவம்மூலம், தன்னை நங்கூரமாக்கிக்கொண்டு பெறற 138 ஓட்டங்கள், பாகிஸ்தானைக் காப்பாற்றியது.

புதிய வீரர்களை அறிமுகப்படுத்தப்போய், வரலாற்று வசை நிறைந்த தோல்வியைப் பாகிஸ்தான் பெறவிருந்தது என்ற இன்னொரு பக்கக் குற்றச்சாட்டுகள் எழும்வேளையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சம்பந்தப்பட்டோர் தலைதப்பியது தம்பிரான் புண்ணியம் என்று, ஆறுதல் பெருமூச்சுவிட்டிருப்பார்கள்.

உலகக்கிண்ணப் போட்டிகளின்பின் - பாகிஸ்தான் கட்டியெழுப்பப்படும் அணிதான் என்றாலும், பலவீனப்பட்ட அணியல்ல. ஆனால், அவர்களுக்குச் சமதையாக பங்களாதேஷ் அணி - தன் ஆற்றலை வெளிப்படுத்தியிருக்கிறது.

துடுப்பாட்ட வரிசையில் - ஹபிபுல் பஸார், ஹனான் சர்க்கார், ஜாவிட் ஓமர் போன்றவர்களின் திறமையை வெளிக்கொணர்ந்திருப்பவர் வட்மோர்தான். பந்துவீச்சு வரிசையில் இருநூற்றைம்பது, முன்னூறு ஓட்டங்களுக்குக் குறைவாக எதிரணியை வீழ்த்தும் திறமையை பங்களாதேஷ் அணிக்குக் கற்றுக்கொடுத்திருப்பது முதல் இனிங்சில் பாகிஸ்தானைவிட, பங்களாதேஷ் அதிக ரன் சேகரித்திருப்பது என்பவற்றுக்குக் காரணம் வட்மோர்தான்.

அவர், தனது பயிற்சியின் ஆரம்பகட்டத்தில், ஒவ்வொரு வீரனின் தனித்திறமையையும் முதலில் வளர்த்தெடுக்கவேண்டும் என்று கூறியிருந்தார். அதில் பெருமளவு வெற்றிபெற்றுள்ளார் என்றே கூறவேண்டும். அதன் பெறுபேறாக, ஒரு அணி கட்டியெழுப்பப்படுகிறது என்பதையும் அவதானிக்கமுடிகிறது.

மூன்றாவது டெஸ்ட் போட்டியில் - பாகிஸ்தான் அணியின் மிகுந்த அனுபவம் நிறைந்த இன்சமாம் உல் ஹக் மட்டும் விடாப்பிடியாக நின்று சதம் அடித்திருக்காவிட்டால், பங்களாதேஷ் அணி - தனது முதலாவது டெஸ்ட் வெற்றியைக் கண்டிருக்கும். இந்தளவுதூரம் பங்களாதேஷ் அணியை வளர்த்தெடுத்ததில் வட்மோரின் பங்கு மிகப் பெரியதல்லவா? எனவே, வட்மோர் பங்களாதேஷ் அணிக்கு ஆற்றும் சேவை, சர்வதேச கிரிக்கெட்டுக்கு ஆற்றும் சேவையாகும்.

**ஜோசப் கிருஷ்ணா**

## ஐய்யயோ பொண்ரிங்கூட லீயும் வாறார்டா

பார்வைக்கோளாறு பற்றிப் பேசுகிறார் பிரெட் லீ. உலகின் அதிவேகமான பந்தினை வீசிய இருவரில் - ஒருவர் லீ, இன்னொருவர் அக்தார். முறையற்ற பந்துவீச்சுக்கள் பற்றிய சர்ச்சைக்குள்ளாகி, பின்னர் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் இவர்கள். இவரின் பந்துவீச்சு வேகமே அதற்குக் காரணம். அதிவேமாகப் பந்துவீசினால், முறைதவறித்தான் அது சாத்தியமாகும் என்று நினைப்பவர்கள் பற்றிக் குறிப்பிடும்போதே, பார்வைக் கோளாறு பற்றி லீ குறிப்பிட்டார். எங்களால் 160 **KMPH** இல் பந்து வீசமுடியாத நிலையில், இவர்களால் எப்படி அது சாத்தியமாகும் என்ற குறுக்குப் பார்வையே, இந்தப் பிழையான பார்வை என்கிறார் அவர். சரியான பயிற்சியும், முயற்சியும் இருந்தால், எந்த வேகத்திலும் துல்லியமாகப் பந்துவீச முடியும் எனும் லீ இருபத்தெட்டு, இருபத்தொன்பது வயதிலேயே உண்மையாக வேகப்பந்துவீச்சாளன் பூரணத்துவமடைகிறான் என்கிறார். தான் தொடர்ந்து கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறும் லீ; தன்னால் - தனது சாதனை வேகமான, மாவன் அத்தப்பத்துவின் இலக்குகளை எகிறச்செய்த, 161.1 **KMPH** இற்கு மேலும் வேகமாகப் பந்துவீச முடியும் என்று கூறியிருக்கிறார். ஆரம்பத்தில், எனது சராசரி பந்துவீச்சு வேகம் 140 - 150 **KMPH** ஆகத்தான் இருந்தது. பின்னர், படிப்படியாக வேகத்தை வளர்த்துக் கொணடேன் என்கிறார்.



'நீங்க ஒருதரம் சொன்னா நூறுதரம் சொன்ன மாதிரி'

அடுத்து, தற்போது பரவலாக இருதரப்புக் கருத்துக்குள்ளாகியிருக்கும் மைதானத்தில், வார்த்தையாடல் பற்றியும் (**SLEDGING**) தன் கருத்தை முன்வைத்துள்ளார். வார்த்தையாடல் என்பது, தனிப்பட்ட ரீதியில் மனதைப் புண்படுத்துவதாகவும், இனரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கக் கூடாது. அதுதவிர, வேறுவகையில் வார்த்தையாடல் ஏற்படுவது தவறல்ல. அதுவும் கிரிக்கெட் ஆட்டத்தின் விறுவிறுப்புக்கு மெருகூட்டுவதுதான் என்பது, அவரது வாதம். லீ இதுவரையில் 125 டெஸ்ட் விக்கெட்டுக்களையும், 137 ஒருநாள் விக்கெட்டுக்களையும் சாய்த்திருப்பவர். அடுத்து, அவர் ஆவலோடு எதிர்பார்ப்பது, இந்தியாவில் நடைபெறவிருக்கும் இந்திய, நியூசிலாந்து, அவுஸ்திரேலிய முக்கோண ஒருநாள் சர்வதேசப் போட்டிகளையாகும். லீ - இந்திய வீரர்கள் பற்றி உயர்வாகவே கூறுகிறார். மத்திய வரிசைவரை, சிறந்த துடுப்பாட்ட வரிசையை இந்தியா வைத்திருக்கிறது என்னும் பிரெட் லீ, சச்சின் உலகத்தரம் வாய்ந்த முதன்மையானவர். அவருக்கு வியூகம் வகுப்பது என்பது, மிகச் சிரமமானது என்பதையும் ஒப்புக்கொள்கிறார். இதையெல்லாம், தனது தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு, இந்தியாவுக்கு வந்து அங்கிருந்துதான் கூறுகிறார். இந்தியா- உலகக்கிண்ணப் போட்டி இறுதி ஆட்டத்தினால், ரிக்கி பொண்ரிங்கின் அவுஸ்திரேலிய அணியிடம் படுதோல்விகண்டபின், வருகிற மாதம் இந்தியாவில் வைத்து, அவுஸ்திரேலியாவைச் சந்திக்கப்போகிறது. உலகக்கிண்ணப் போட்டிகளில் - அவுஸ்திரேலியாவிடம் வாங்கிய பாரதூரமான அடி, இன்றும் மாறாத வடுவாக இந்திய அணியிடம் படிந்துவிட்டது. மீண்டும் அதே தரத்து அணி - இந்திய மண்ணில் நுழைந்து, தமக்கு இழப்பை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சம் கங்குலிக்கும், தோழர்களுக்கும் இருக்காதென்பது என்ன நிச்சயம்?

**நிர்மலன்.**

## எல்லைகடக்கும் பந்து

வியாழ மாற்றம் ஆசிய கிரிக்கெட்டுக்கு நல்லதுபோலத் தோன்றுகிறது. கனிஷ்ட கிரிக்கெட் போட்டிகளை - பாகிஸ்தான் கனிஷ்ட அணிகளுடன் நடாத்த, இந்தியா அனுமதியை வழங்கியுள்ளமை நல்லதொரு சகுனமாகத் தெரிகின்றது. இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான அரசியல் சர்ச்சைகள், குறிப்பாக காஷ்மீர் பிரச்சினை இருதரப்பிலும் கடும்போக்கை மேற்கொள்வதாகவே அமைந்திருந்தன. இதனால், 2000 ஆம் ஆண்டின்பின் இரு நாடுகளிலும், இருநாட்டு அணிகளும் சந்திக்கும் வாய்ப்பு அறவேயில்லாது போயிற்று. இரு நாட்டு கிரிக்கெட் தலைவர்களும பரஸ்பரம் விளையாட விருப்பம் கொண்டிருந்தாலும், இந்தியா தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்துக்கொண்டே வந்திருந்தது.



'சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்'

ஆனால, கடந்த ஆறு மாதகாலமாக இருதரப்பிலும் ஒரு மென்போக்குக் காணப்படுவது- மீண்டும் பரஸ்பர கிரிக்கெட் தொடர்புக்கு வழி வகுக்கும் போலவே தெரிகிறது. இந்திய கிரிக்கெட் சபையின் மூன்று விருப்பங்களை இந்திய அரசு ஏற்றுக்கொண்டிருப்பதாக, வெளியுறவு அமைச்சின் குரல்தரவல்ல அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். ஒன்று - இலங்கையில் நடாத்த உத்தேசித்துள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமி நிலையில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் கலந்துகொள்ளும் முத்தரப்புப் போட்டி.

அடுத்தது - 19 வயதிற்குட்பட்ட நான்கு அணிகளான - இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் கலந்துகொள்ளும், பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஒருநாள் போட்டித் தொடர்.

இன்னொன்று - இந்தியாவில் நடாத்த உத்தேசித்துள்ள இந்தியா, பாகிஸ்தான் இலங்கை 'ஏ' அணிகள் பங்குகொள்ளும் ஒருநாள் போட்டிகள். இவையெல்லாம் ஒரு ஆரம்பக்கட்ட நடவடிக்கைதான். மக்களை - மக்கள் பரஸ்பரம் புரிந்துகொள்ளும் ஒரு சந்தர்ப்பமாக இவை அமையும். காலப்போக்கில் இதன் தொடர்ச்சியாக, இரண்டு நாடுகளும் டெஸ்ட் போட்டிகளில் பங்குகொள்ளுமா என்பது பற்றிக் கருத்துத் தெரிவிக்க வெளியுறவு அமைச்சு அதிகாரி தயாராக இல்லை. இறுதியாக இந்தியா, பாகிஸ்தானுக்கு டெஸ்ட் தொடரில் விளையாடச் சென்றது. 1988 - 1989 இல் அதேபோன்று பாகிஸ்தான் - இந்தியாவிற்குச் சென்றது. 1999 இல் இதன் தொடர்ச்சியாக இரண்டு நாடுகளும், 2004 ஆம் ஆண்டில் பரஸ்பரம் டெஸ்ட் தொடரொன்றை இந்தியாவில் அல்லது பாகிஸ்தானில் விளையாடுவதில் யாருக்குத்தான் விருப்பமாக இராது?

**-சரண்யன்.**

## எடுத்தவா தொடுத்தவா

பாகிஸ்தான் அணியின் தலைவர் றசீட் லத்தீப், அடுத்த ஐந்து சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். இவருக்குப் பதிலாக, பங்களாதேஷுடனான மூன்றாவது டெஸ்ட்போட்டியில், பங்களாதேஷ் அணிபெறவிருந்த மகத்தான வெற்றி யொன்றை, போராட்டத்தினூடே சதமடித்து, பாகிஸ்தான் வெற்றியாக மாற்றிய இன்சமாம் உல் ஹக் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இன்சமாம் ஒரு விதமாக பங்களாதேஷின் டெஸ்ட் வெற்றியைப் பறித்துக்கொண்டார். றசீட் லத்தீப்பும் இன்னொரு விதத்தில் பங்களாதேஷின் வெற்றி வாய்ப்பைப் பறித்துக் கொண்டாலும் அதுதொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.



பங்களாதேஷின் அணியின் துடுப்பாட்ட கொண்ட, யசீர் அலி கடுமையாக வீசிய லாவது சிலிப் திசையில் பறந்தபோது, றசீட் பாய்ந்து, அந்தக் கட்சைப் பிடித்தார். பிடித்த தான். ஆனால், பந்தைப் பிடித்தபின் அது அதனைப் பிடித்தார். இதனை அவதா களில் இரண்டு நடுவர்களும் இல்லாமையால் எனத் தீர்மானிக்கப்பட்டார். அவரும் வெளி

ஆனால், தொலைக்காட்சியில் மீளப் பார் லத்தீப் - கட்சைச் சுத்தமாக எடுக்க வில்லை மாயிற்று. ஆனால் இதுபற்றி, தான் வில்லை என்கிறார் விக்கெட் காப்பாளர் றசீட வேளை, பங்களாதேஷ் அணியின் முகா கான் செய்த முறைப்பாட்டால், தமது அணியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி வாய்ப் பொன்றை லத்தீப் பறித்து விட்டார் என்கிறார். இருந்தும் இதற்கான தீர்வு கூறவேண்டிய பொறுப்புமிக்கவர் ஆட்ட மத்தியஸ்தர்

வீரர் அலோக்கப்பாலி எதிர் பந்து துடுப்பில்பட்டு, முத லத்தீபும் மின்னலெனப் தென்னவோ உண்மை தரையில்பட, மீண்டும் னிக்கும் கோணங் அலோக் - அவுட் யேறிவிட்டார்.

வையிட்டபோது, என்று நிரூபண அறிந் திருக்க லத்தீப். இதே மையாளர் லத்தீப்

மைக் புறொக்ரர். அவர் உத்தியோகபூர்வமாக றசீட் லத்தீப் ஐந்து ஒருநாள் ஆட்டங்களில் ஆட முடியாதெனத் தடை விதித்துள்ளார். பொது வான கருத்து என்னவெனில், றசீட் லத்தீப் - அலோக்கப்பாலி வெளியேறிக்கொண்டிருக்கும்போது, மீண்டும் துடுப்பாட அழைத்திருக்க வேண்டும் என்பதாகும். இதுவொரு சர்ச்சைக்குரிய விடயம்தான். சில சந்தர்ப்பங்களில் இப்படியான நிகழ்வுகள் நடந்துவிடுவதுண்டு. இருந்தாலும், றசீட் லத்தீப் துர்ப்பாக்கியசாலி என்றே கூறவேண்டும்.

**வெரோனிக்கா**

SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS

# இது இவர்களின் காலம்

பிரெஞ்ச் ஓப்பன் மகளிர் இறுதிப் போட்டியில் கலந்துகொண்ட ரென்னிஸ் வீராங்கனைகளே - அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்



கிலிஸ்ரர்ஸ் - நாவடக்கம் நல்லது

மகளிர் இறுதிப் போட்டியிலும் கலந்து கொண்டனர். பெல்ஜியத்தைச் சேர்ந்த இந்த இரு வீராங்கனைகளுக்கும் சுற்றுப் போட்டி தொடங்க முன்பே, இப்படித்தான் இறுதிப்போட்டி அமையும் என்று எதிர்வு கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. ஆனால், இரண்டு வீராங்கனைகளுக்கும் மத்தியிலும் தானே வெல்லவேண்டும் என்ற வெறியும் இருந்ததும் அவதானிக்கப்பட்டது. கிம் கிளிஜ்டர்ஸ் எதுவித கிராண்ட் ஸ்லாமும் வெல்லாமலே தரம் ஒன்றினைப் பெற்றுக் கொண்டவர். இதற்குக் காரணம் வீனஸ் சகோதரிகள் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள முடியாமற் போனமையே. இதே வேளை, ஜஸ்ரின் ஹெனின் பிரெஞ்ச் ஓப்பனில் கிம் கிளிக்டர்டையே தோற்கடித்துப் பட்டம் வென்றவர். இதேபோல அமெரிக்க ஓப்பன் மகளிர் இறுதிப் போட்டியிலும் அவரைத் தோற்கடித்து ஜஸ்ரின் ஹெனின் மகளிர் பட்டத்தை வென்று கொண்டார்.

இதேவேளை, மூன்றுமுறை கிராண்ட் ஸ்லாம் வென்ற ஜெனிபர் கப்ரியாட்டி, ஜஸ்ரின் ஹெனினிடம் அரை இறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததையடுத்து மிகவும் மனம் நொந்துபோயுள்ளார். ஏனெனில் அமெரிக்க ஓப்பன் வெற்றிக் கிண்ணத்தை ஒரு முறையாவது வெல்லவேண்டும் என்பது அவரது கனவு.

ஜெனிபரின் துயரம் என்னவென்றால், இதுவரையில் தன்னால் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளில் அரை இறுதிப் போட்டியைத் தாண்ட இயலாமல் இருக்கிறதே என்பது. ஆண்கள் ஒற்றையர் போட்டியைப் பொறுத்தவரை பிரெஞ்ச் ஓப்பன் சம்பியன் றொஜாவெடரர் தோல்வியடைந்தமை ஒரு அதிர்ச்சி. இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றவர்கள் அமெரிக்காவின் அன்டி றொடிக்கும் ஸ்பானியாவின் ஜூவான் கார்லோஸ் பெரெயராவுமாவார். இவ்விருவருக்கும் இடை யிலான போட்டியில் அன்டிறொடிக் 6-3, 7-6, 6-3 என்ற செட்கணக்கில் ஆண்கள் ஒற்றையர் கிண்ணத்தை வென்றார். இருபத்தொரு வயதான றொடிக் பெற்ற முதல் கிராண்ட் ஸ்லாம் வெற்றி இதுவாகும்.

மறுபுறம் அமெரிக்காவின் சாதனை வீரன் அன்ரி அகாஷியின் விருப்பும் கனவாகிப் போய்விட்டது. இருமுறை அமெரிக்க ஓப்பன் வெற்ற முப்பத்து மூன்று வயது நிறைந்த அகாசி - என்றும் மனந்தளர்ந்துபோகும் நபரல்ல. பிரெஞ்ச் ரென்னிஸ் ஆடவர் ஒற்றையர் போட்டியில் இடைநடுவிலேயே தோல்வியைத் தழுவிக்கொண்டபோது மிகுந்த தன்னம்பிக்கையுடன் நான் அடுத்த முறையும் இப்போட்டிகளில் கலந்துகொள்வேன் என்று கூறியிருந்தார். அமெரிக்க ஓப்பனில் ஜூவான் கார்லோசிடம் தோல்வியுற்ற அமெரிக்கக் கிண்ணம் கனவாகிப்போன நிலையில், என்று மனைவி ஸ்ரெபி கிராப் மற்றும் மகனின் மூலம் கிடைக்கும் உளவியல் தைரியத்தின்மூலம் தான்



ஹெனின் -நான் உண்மையானவ

மீண்டும் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளில் வெற்றி பெறுவேன் என்று கூறியிருக்கிறார். எது எவ்வாறாயினும் அரையிறுதிப் போட்டிவரை வந்து தோல்வி காண்பது துயரமானதுதான். ஆனால், அதனால் துவண்டு போகாமல் தான் மீண்டும் வருவேன் என்று தன்னம்பிக்கையுடன் கூறுவது எல்லோருக்கும் சிறந்ததொரு முன் மாதிரிதான்.

மக்டலின்

# ஹன்சி குறோன்ஞேயின் மறைவு

ஹன்சி குறோன்ஞ்சே மறைந்து இரண்டு வருடங்களாகின்றது. ஆனாலும், அவரின் மறைவின் பின்னணி குறித்து இன்னும் திடுக்கிடும்படியான தகவலகள் கிடைத்தவண்ணமே உள்ளன. இப்பொழுது கிடைத்துள்ள செய்தி - குறோன்ஞேயின் இறப்பு விபத்து அல்ல. அது சதி என்பதே அந்தச் சந்தேகம்.

இதில் எந்தளவிற்கு உண்மை உள்ளதோ என்பதுபற்றித் தெரியவில்லை. ஆனால் நெருப்பில்லாமல் புகைவருமா என்ற கேள்வியுடன் இதையும் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.



நெஞ்சம் மறப்பதில்லை

ஜோகன்னர்ஸ் பேர்க்

## விதியா? சதியா?

நகரிற்குச் செல்லும் வழியில் ஜோர்ஜ் என்ற மலைத் தொடரில் - விமானம் விழுந்து நொறுங்கி குறோன்ஞே உயிரைப் பறித்தது ஒரு விபத்தல்ல. அதுவெறும் சதியே. குரோன்ஞே இறக்காதிருந்திருந்தால் - ஆட்ட நிர்ணய ஊழலில், தன்னுடன் சேர்ந்து லஞ்சம் வாங்கிய ஏனைய தென்னாபிரிக்க வீரர்களையும் காட்டிக்கொடுத்திருப்பார்.

இதற்குப் பயந்தே - அவர்கள் குறோன்ஞேயை சதிசெய்து கொலை செய்திருக்கிறார்கள் என்றெல்லாம் புதுப்புது ஐயங்கள் எழுகின்றது. இவையெல்லாம் எந்தளவுக்கு உண்மையென்று தெரியாவிட்டாலும், தென்னாபிரிக்க உளவுப் பிரிவினரும், பொலிஸாரும் தீவிர விசாரணைகளிலும் - புலனாய்விலும் ஈடுபட்டு வருகின்றார்கள் என்பது மாத்திரம் வெளிப்படை உண்மை.

தான், சஞ்சய் சாவ்லா என்ற இந்திய சூதாட்ட முகவருடன் இரகசிய தொடர்பு கொண்டதாகவும், ஆட்ட நிர்ணய சதிக்காக 1300000 டொலர் பணத்தைப் பெற்றதாகவும் ஒப்புக்கொண்ட குறோன்ஞே, இதற்காகப் பொலிஸாரிடம் மட்டுமல்ல - பார்வையாளர்கள், இரசிகர்கள் என்று அனைத்துத் தரப்பினரிடமும் வெளிப்படையாக மன்னிப்புக் கோரியிருந்தார்.

11 ஆம் திகதி ஒக்டோபர் மாதம் 2003 ஆம் ஆண்டு முதல் தென்னாபிக்க ஐக்கிய கிரிக்கெட் சபையினரால் - குறோன்ஞேயின் கிரிக்கெட் வாழ்வுக்கு ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்டது.

தனது தவறு மற்றும் அதனால் தான் அனுபவித்த தண்டனை, அதனூடு கிடைத்த அவமானம் என்பவற்றால் வேதனையடைந்து, விரக்தியடைந்த குறோன்ஞே தற்கொலை முயற்சிவரையும் சென்று, ஒருவாறு மீண்டு கொண்டார். இவரின் ஊழல் காரணமாக- தென்னாபிரிக்க இரசிகர்கள் மத்தியில் பெரும் வெறுப்பு ஏற்படவில்லை. அவர்மீதான பற்று- என்றென்றும் குறைந்திருக்கவில்லை.

அவர் தனது வீட்டில விரக்தியுடன் சோகமாக இருப்பார் என்றும், ஒழுங்காகச் சாப்பிடுவதில்லை, உறங்குவதில்லை - என்றெல்லாம் குறோன்ஞேயின் தயார் கூறுவார்.

அந்த விரக்தியின் உச்சத்தில்தான் - தற்கொலை முயற்சிசெய்ய நேரிட்டது என்றும் - இதனால் கலக்கமடைந்த தென்னாபிரிக்க இரசிகர்கள் -

அவரைத் தெம்படையச்செய்து, சந்தோசப்படுத்துவதற்காக, மியூசிக் அல்பம் ஒன்றைத் தயாரித்து - அவருக்குப் பிறந்தநாள் பரிசாகக் கொடுத்த பின்னர்தான், அதைக் கேட்டுக் கேட்டு, குறோன்ஞேயின் முகத்தில் சந்தோசமும், ஆறுதலும் துளிர்க்கத் தொடங்கியது என்றும், இவரின் தாயார் கூறினார்.

தென்னாபிரிக்க அணியை - நம்பர் 1 நிலைக்கு ஆக்கிய பெருமையைக் கொண்டவர் இவர். தேய்ந்துபோன அணியைச் செப்பனிட்டுப் புதுவடிவம் கொடுத்தவர்.

எல்லோருடனும் (எதிரணியைக்கூட) அன்பாக அணுகி, எல்லோராலும் நேசிக்கப்பட்டவர். ஒரு நல்ல மனிதன். தோல்விகளைக் கண்டு துவண்டுபோகாமலும், வெற்றியைக் கண்டு ஆரவாரம் செய்யாமலும் இருந்தவர்.

இவர் 136 ஒருநாள் போட்டிகளில்- இரண்டு சதம், 28 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 4100 ஓட்டங்கள் (அதிகூடிய ஓட்டம் 112, சராசரி 39.42) 54 பிடிகள் 77 விக்கட்டுக்கள் என்பவற்றைப் பெற்றவர்.

அத்துடன், 46 டெஸ்ட்போட்டிகளில் 5 சதங்கள், 14 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 2678 ஓட்டங்களைப் பெற்றவர். (அதிகூடிய ஓட்டம் 135, சராசரி 36.68, ஆட்டமிழக்காத போட்டிகள் 8).

அத்துடன், 14 பிடிகளையும் 461.1 ஓவர்கள் பந்துவீசி 173 கன்னி ஓவர்கள் வீசி 913 ஓட்டங்களைக் கொடுத்து 26 விக்கட்டுக்களைப் பெற்றவர்.

ஒரு ஆழுமையுள்ள நல்ல மனிதனின் அணித்தலைவனின் இழப்பு சதியா? விதியா? என்று தெரியாவிட்டாலும் அவரும் அவருடைய நினைவுகளும் என்றும் தென்னாபிரிக்க இரசிகர்கள் மத்தியில்லாமல் உலகெங்குமுள்ள எத்தனை இரசிகர்கள் மனங்களிலும் நிலைக்கும்.

-வீ.ஏ.கோபி

# விட்டுக்கொடுக்கப்போவதில்லை



ஹெலி வைற் - தங்கத்திலே குறையில்லை

பாரிஸ் தடகளப் போட்டிகள் முடிவடையுமுன்னரே 100 மீற்றர், 200 மீற்றர் இரண்டிலும் தங்கம் வென்று சாதனை படைத்த அமெரிக்க வீராங்கனை கெலிவைட் மீது ஊக்க மருந்து பாவித்ததான குற்றச்சாட்டு எழுந்தது. தற்போது சர்வதேசத்தடகளச் சங்கமான **IAAF** தடைசெய்யப்பட்ட மருந்தான **MODAFINIL** பாவித்த குற்றச்சாட்டை உறுதிசெய்து அவரை குற்றவாளியாகக் கண்டிருக்கிறது. இதனை அமெரிக்க போதை எதிர்ப்பு நிறுவனமும் உறுதிசெய்தால் கெலி வைற்றின் இரண்டு தங்கப் பதக்கங்களும் பறிக்கப்பட்டுவிடும். ஆனால் கெலிவைற் **IAAF** இற்கு அளித்த விளக்கத்தை அவர்கள ஏற்றுக்கொள்ளவில்லை. இதேவேளை, அமெரிக்க போதை எதிர்ப்பு நிறுவனம் **IAAF** இன் முடிவுடன் இணங்கிப் போகமறுத்தால் இந்தப்பிரச்சினை இத்துறை சார்ந்த சுவிட்சர்லாந்தின் உள்ள நீதிமன்றத்தில்தான் சென்று முடிவடையும். இதற்கு முன்னர் **IAAF** இதுபோன்றதொரு வழக்கில் அமெரிக்க தடகளச் சங்கத்திடம் தோல்விகண்டிருந்தது. இது தொடர்பில் கெலிவைற் கருத்துக் கூறுகையில் - தான் பாவித்த மருந்து தடை செய்யப்பட்ட மருந்துப்பட்டியலில் இல்லை என்றும், மேலும் தான் அம்மருந்தை வெகு குறைவாகவே பாவித்தாகவும் கூறுகின்றார்.

தற்போது **IAAF** இன் முடிவு ஒழுங்கு முறைப்படி தடகளச் சங்கத்திற்கு சமர்ப்பிக்கப்படும்வரை கெலி வைற்றின் பதக்கங்கள் பறிக்கப் படமாட்டாது என்பது உண்மையே. ஆனால் அடுத்தடுத்த கட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் இருவருக்குப் பகிரங்க எச்சரிக்கை விடுக்கப்படுவதுடன் முழுப்போட்டிகளில் இருந்தும் விலக்கப்பட்டவரும் ஆவார். இதேவேளை இவர் பெற்றுக்கொண்ட பரிசான இலங்கைப் பணப் பெறுமதியில் ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாவையும் இழக்க வேண்டி ஏற்படும். ஆனால் கெலிவைற் விட்டுக்கொடுக்கவேமாட்டார் போலத் தெரிகின்றது. "நான் எனது பதக்கங்களைக் காப்பாற்றிக்கொள்ளச் சட்டத்தின் ஊடே போராடுவேன். இந்தப் பதக்கங்களைப் பெற நான் எவ்வளவோ முயற்சிகள் செய்திருந்தேன். இதேவேளை எனது கௌரவம் சார்ந்த விடயமும் இது" என்கிறார். முடிவு விரைவில் தெரிந்துவிடும் பொறுத்திருந்து பார்ப்போம்.

இதோடு இணைந்ததலா இன்னொரு பக்கத்தால் பிரெஞ் ஒப்பன், மற்றும் அமெரிக்க ஒப்பன், மகளிர் ஒற்றையர் சாம்பியன் ஜஸ்ரின் ஹெனின் மீது அவரின் நேரடிப் போட்டியாளரான கிம்கிளிஸ்டர்ஸ் முகாமில் இருந்து ஊக்கமருந்து பாவிப்பதான குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது முட்டாள்தனமும் சிறுமைத்தனமுமானது என்று குமுறுகிறார். ஜஸ்ரின் ஹெனின் என்று ஒரே போதை மருந்து கடும் உழைப்புத்தான். எனது தகுதியையும், பலத்தையும் வளர்த்துக்கொள்ள நான் எவ்வளவோ கஷ்டப்பட்டேன். இதற்கு நல்ல உதாரணம் அரை இறுதிப்போட்டியில் ஜெனிபர் கப்ரியாடியை நான் வெல்லமேற்கொண்ட பிரயத்தனங்கள் என்கிறார். ஹெனின் ஹெனின் பயிற்றுனர் கருத்துக்கூறும்போது இதைப் பொருட்படுத்தத் தேவையில்லை. இது எதிரணியினரின் தோல்வியால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியே தவிர வேறேதும் இல்லை என்றார். இது சரிபோலத்தான் தெரிகிறது.

-றோஜா.



அதிசயம் ஆனால் உண்மை

SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

நாடாது நட்டலிற் கேடில்லை நட்பின்
விடில்லை நட்புஆள் பவர்க்கு.

- திருக்குறள்

## நமது நோக்கு

### தேவை நிதியல்ல... நீதியே!

அரசும், விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, தொடர்ந்தால் மட்டுமே - முன்னர் ரோக்கியோ மாநாட்டில் வழங்குவதற்கு உறுதியளித்த பெருந்தொகை நிதியை வழங்கமுடியுமென்று, ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி, வழங்கப்படவுள்ள நிதியுதவிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆராய, கொழும்பில் நடைபெற்ற மாநாட்டின்போது தெரிவித்திருக்கிறார்.

இந்த மாநாட்டில் - உதவிவழங்கும் 12 நாடுகளின் பிரதிநிதிகளும், 7 சர்வதேச உதவி வழங்கும் பொது அமைப்புக்களும் கலந்துகொண்டதுடன், அரசின் பிரதிநிதிகளாக அமைச்சர்கள் பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் ஆகியோரும் பங்குபற்றியுள்ளனர்.

எதிர்பார்த்தது போலவே, விடுதலைப் புலிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாததுடன், அதற்கான காரணிகளையும் விளக்கி ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷிக்கு கடிதமும் அனுப்பியுள்ளனர். விடுதலைப் புலிகள் இந்த மாநாட்டில் பங்குபற்றாதது, தமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாக தெரிவித்துள்ள யசுசி அகாஷி, மாநாட்டில் அவர்கள் கலந்துகொண்டால் - அவர்களின் பிரதேசத்திற்கு அதிக நன்மைகள் கிடைக்கும் என் றும் கூறியுள்ளார்.

வெறுமனே மாநாடுகளை நம்பி, வெறுமனே பேச்சுக்களில் கலந்துகொண்டு, வெறும் வாக்குறுதிகளை மட்டுமே பெற்றுக்கொண்டு வெறுமிகளாக ஏமாற்றப்பட்டு வாழ்ந்த வரலாறு தமிழர் களுக்குரியது.

வட்டமேசை, சதுரமேசை, திம்பு மேசை, பெங்களூர் மேசை என எத்தனையோ மேசைகளை சமாதானத்தின் பேரில் தமிழ்த் தலைமைகள் சந்தித்து ஏமாந்துள்ளன என்பதை விளக்கவேண்டியதில்லை.

இந்த மேசைகளைச் சுற்றியிருந்தவர்கள் நடத்திய மாநாடுகளில் பேசப்பட்ட காவியங்களும், அந்தந்தக் காலங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டதுடன் - பெருமெடுப்பில் பிரசாரமும் செய்யப்பட்டு, இதோ சமாதானம் வந்துவிட்டது, தீர்வை எட்டிவிட்டோம் என்றெல்லாம் பிரகடனமும் செய்யப்பட்டமை - சரித்திரம் ஜீரணித்து வைத்துள்ள விடயங்களேயாகும்.

ஆனால், எல்லா மாநாடுகளின் முடிவிலும் அரச தரப்பினர் அடைந்த ஆதாயத்தை தமிழ்மக்கள் அடைந்ததேயில்லை.

இதனை சர்வதேச சமூகமும் தெளிவாக அறிந்தேயுள்ளது. எல்லாக்கட்டத்திலும் தமிழ்மக்களின் கூதலுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட போர்வைகள் யாவும், அரசையும்- அது சார்ந்த பெரும்பான்மை சமூகத்தவரையும், அதன் ஆதரவாளர்களையும் மட்டுமே கதகதப்பாக வைத்திருக்க பயன்படுத்தப்பட்டது.

தமிழ்மக்களை எந்த மாநாட்டு முடிவுகளும் ரட்சிக்கவில்லை, பாதுகாக்கவில்லை, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவுமில்லை.

மாறாக, ஒவ்வொரு கட்டத்திலும் - அவர்கள் புதிய புதிய உத்திகளைப் பயன்படுத்தும் அரசினாலும், அரசுக்கு ஆமாம் போடும் சர்வதேச நாடுகளாலும், ஏனைய அமைப்புக்களாலும் மிகமோசமாக ஏமாற்றப்பட்டு, மேலும் மேலும் பாதிக்கப்படவே செய்தனர்.

இப்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழல்கூட, விடுதலைப் புலிகளால் ஒருதலைப்பட்சமாக உருவாக்கப்பட்டு, பின்னர் அரசுடனான புரிந்துணர்வு உடன்படிக்கைமூலம் உறுதிப்படுத்தப்பட்டு, சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் பெற்றே இன்னமும் தொடரக்கூடியதாக உள்ளது.

இந்த சமாதான சூழலைக்கூட, குழப்புவதற்கு தென்பகுதியின் இனவாதிகளின் கும்பல், ஜனாதிபதியின் தலைமையின் பின்னால் அணிதிரண்டு நிற்பதையும் உலகம் உணரவேண்டும்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையான பல அம்சங்கள் - குறிப்பாக தமிழ்மக்களின் பாரம்பரிய வாழ்விடம் மற்றும் இனதனித்துவத்தை பாதுகாக்க அவசியமான வாழ்வியல் உரிமைகள் போன்றவை சம்பந்தப்பட்ட விடயங்களில், அரசு ஒப்புக்கொண்ட பிரகாரம் எதனையும் அமுல்செய்யமுடியாத நிலையே உள்ளது.

இது ஒரு வருந்தத்தக்க - நம்பிக்கையற்ற நிலையேயாகும்.

இத்தகைய உத்தரவாமற்ற நிலையில் அபிவிருத்தி, புனர்வாழ்வு, சமூக மேம்பாடு குறித்து சிந்திப்பதென்பது அபத்தமான விடயமே.

உலக சமூகம் வழங்கும் நிதியுதவிகள் தமிழ்மக்களுக்கான அரசியல் உரிமைகளை பெற்றுத்தர முயலப்போவது கிடையாது.

அது, பேச்சுவார்த்தையின் இன்னொரு நகர்வைப் பொறுத்தது என்று கூறக்கூடும்.

இப்போதைய மக்களின் தேவை, அவர்களின் வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான - அவர்களின் சுயநிர்ணய உரிமைக்கான - உறுதியான உத்தரவாதமான தீர்வொன்று மட்டுமேயாகும்.

உரிமைகளை அங்ககரிக்காத - உறுதிப்படுத்தாத நிலையில், மக்கள் தமது இருப்புக்கான சுதந்திரத்தை இழந்து, உயர் பாதுகாப்பு வலய முட்கம்பிகளுக்கப்பால், தமது வாழ்விடங்களை நோக்கி ஏக்கமுடன் வெறித்து நிற்கும் நிலையில், அபிவிருத்தி பற்றி சிந்திக்க அவர்களுக்கு அவகாசமே கிடையாது.

எனவே, ஜப்பானிய விசேட தூதுவரின் பேச்சு நோயால் அழும குழந்தைகளுக்கு இனிப்புக்கொடுத்து சமாளிக்கும் தன்மை கொண்டதாகவே உள்ளது.

நோய்க்கு மருந்துதான் தேவை.


பிரச்சினைக்கு தீர்வுதான் தேவை.

வாக்குறுதிகள் ஏமாற்றும் தன்மை கொண்டவை.

இந்தநிலையில், இடைக்கால நிர்வாக யோசனைகளை அங் கீகரித்து, அரசு - தமிழ்மக்களுக்கு குறைந்தபட்ச நம்பிக்கையையாவது ஏற்படுத்த ஜப்பானிய விசேட தூதுவர் அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்தால்... அது சாத்தியமாகும் பட்சத்தில் அபிவிருத்திக்கான யோசனைகள் குறித்து சிந்திக்கலாம்.

இப்போது தமிழ்மக்களுக்கு நிதியல்ல முக்கியம்... நீதிதான். அதுவும் அரசியல் ரீதியிலான நீதிதான் முக்கியம்.

## நாடும் நடப்பும்




### மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில்

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் உதவி!

கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து தற்போது, வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியேறிய மக்களுக்கு, தொண்டர் நிறுவனங்கள் வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கமுன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் முதல் கட்டமாக 420 வீடுகள் இந்தப் பிரசேததில் அமைக்கப்படவுள்ளதாக உதவி அரச அதிபர் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜி.ரி.இசற் நிறுவனம், வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் பிரிவில் 107 வீடுகளையும், போக்கறுப்பு கிராம அலுவலர் பிரிவில் 68 வீடுகளையும் அமைக்கவுள்ளது.

யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் உடுத்துறை கிராம அலுவலர் பிரிவில் 120 வீடுகளையும் கட்டிக்கொடுக்கவுள்ளது. நிகொட் நிறுவனம் கட்டைக்காட்டில் 110 வீடுகளையும், வெற்றிலைக் கேணியில் 15 வீடுகளையும் அமைக்கவுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் - காணி உரிமைப் பத்திரங்கள் உள்ளவர்களிற்கு மேற்படி வீட்டுவசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளதாகவும், இவற்றைப் பெறுவதற்காக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்தப்பகுதி கிராம அலுவலர்கள் தெரிவித்தனர்.

(ச,ய,ரா)

## அமைச்சர் மகேஸ்வரனுடன் சிஹல உறுமய சந்தித்து பேச்சு

சிஹல உறுமய கட்சியின் பிரதிநிதிகள் - கடந்த வாரம் இந்து காலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனை, அவரது அமைச்சில் சந்தித்து உரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் - சம்பிக்க ரணவக்க, டொக்டர் அபே நாயக்கா, கொட்டகதெனிய உதயகம்மன்வெல ஆகியோரே சந்தித்து உரையாடியுள்ளார்கள்.

அமைச்சினால் நாடாளுமன்றில் கொண்டுவரப்படவிருக்கும் மதமாற்றச் சட்டம் பற்றி, இருதரப்பினரும் கலந்துபேசியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில், 150 இற்கு மேற்பட்ட பௌத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். புத்த சாசனத்துக்கும் ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இருந்தபோதிலும், இவர்களிடம் இந்தச் சட்டம் பற்றிய எண்ணங்கள் இருந்ததில்லை. இதனால், நீங்கள் செய்வது உயர்ந்த செயல். நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம் என்று சம்பிக்க ரணவக்க - அமைச்சரைப் பார்த்துக் கூறினார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாடசாலை மாணவருக்கு சைவநெறிப் போட்டிகள்

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே, சைவநெறிப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இந்தப் போட்டிகள் - பண்ணிசை, சகலகலாவல்லிமாலை ஓதுதல், பேச்சு, சமய அறிவு, எழுத்துப்பரீட்சை எனப் பல பிரிவுகளாக நடைபெறும்.

இந்தப் போட்டிகளின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இருவர் தெரிவு செய்யப்பட்டு, கோட்டமட்டப் போட்டியில் பங்குபற்றுவர். இதில் முதல் மூன்று இடங்கள் தெரிவு செய்யப்பட்டு வலய மட்டப் போட்டியில் பங்குபற்றுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டமட்டப் போட்டிகள் - இந்தமாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளிலும் வலயமட்டப் போட்டிகள் 27 ஆம் திகதியும் நடைபெறுமெனவும், நல்லூர்க்கோட்டப் போட்டிகள் 20 ஆம் திகதியும், கோப்பாய்கோட்டப் போட்டிகள் 20 ஆம், 21 ஆம் திகதிகளிலும் நடைபெறுமெனவும், யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் போர் ஆரம்பித்தால் புலிகள் நச்சு வாயு பாவிப்பர்

### சிஹல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தால் நச்சு ஆயுதங்களைப் பாவிப்பர். இவ்வாறு சிஹல உறுமய குற்றஞ்சாட்டிள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து, மீண்டும் போர் ஆரம்பிக்குமாக இருந்தால், நிச்சயமாக விடுத்லைப் புலிகள் இரசாயன நச்சு ஆயுதங்களைப் பாவிப்பார்கள். இது தொடர்பாக, ரஷ்யாவைச் சேர்ந்த நச்சுவாயு விஞ்ஞானி ஒருவருடன் புலிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு தேவையான நிதி உதவிகளை, வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்கின்றனர்.

இதனாலேயே - தெல்லிப்பழையிலுள்ள அரசினர் புற்றுநோய் வைத்தியசாலையைப் புனரமைக்கும்படி அரசுக்குப் புலிகள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் எனவும் சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

நச்சுவாயுக்கள் மூலமாக புற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மன்னாரில் அரச அதிபர் சந்தித்துள்ளார்!

(மன்னார)

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து, மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் மக்களை, யாழ்ப்பாண அரச அதிபர் சந்தித்துக் கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள - மாந்தை மேற்கு, மடுப்பிரதேச செயலர் பிரிவுகளில் வாழும் யாழ்ப்பாண மக்களை, நேற்று மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில், காலை பத்து மணிக்கு, யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் சந்தித்தார்.

இடம்பெயர்ந்து வாழும் இந்த மக்களிடம், யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறுவதற்கு உங்களுக்கு என்ன பிரச்சினை உள்ளது. உங்களது இடங்கள் உயர்பாதுகாப்பு வலயமா? அல்லது இராணுவ முகாம்களாக இருக்கின்றனவா? எனக்கேட்ட அவர், நீங்கள் யாழ்ப்பாணம் வந்து மீளக்குடியேறுவதாக இருந்தால், எமக்கு எதுவித பிரச்சினையுமில்லையெனத் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு கலந்துரையாடல் - மன்னார் நகரப் பிரதேச செயலகத்தில், இன்று பிற்பகல் 2 மணிக்கு மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலிலும் யாழ்ப்பாண அரச அதிபர் பங்குபற்றி இடம்பெயர்ந்த மக்களின் கருத்துக்களைக் கேட்டறிவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி, வசாவிளான், ஊர்காவற்துறை, மண்டைதீவு பிரதேசங்களில் உள்ள மக்களே கூடுதலாக இடம்பெயர்ந்து மன்னார் மாவட்டத்தில் வசிப்பது குறிப்பிடத்தக்கது.

(201)

# ஏட்டிக்குப் போட்டியாய் நடக்கும் சந்திப்பு கூறும் சங்கதி என்ன?



நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என அனைவரும் விரும்புகிறோம். நிரந்தர சமாதானம் ஏற்பட்டால்தான், மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய சமாதானம் தொடர்பான ஐயங்கள் முற்றுப்பெறும். இலங்கையில் வாழ்கின்ற இனங்கள் யாவும், தமக்கிடையே மிகவும் கிட்டிய வரலாற்று உறவைக் கொண்டவை. இந்துமதமும், பௌத்தமதமும் எவ்வாறு கிட்டிய உறவைக் கொண்டிருக்கின்றனவோ, அதேபோல கிறிஸ்தவமும், இஸ்லாமும் உறவுகளை வரலாற்றுரீதியாகக் கொண்டுள்ளன. ஆயினும், தற்போதுவரை இந்த இனங்களுக்கு இடையில் முழுமையான புரிந்துணர்வு ஏற்படவிலலை. மதரீதியாகவோ அல்லது சமூகரீதியாகவோ இந்த இனங்கள் தமது அடையாளங்களைத் தனியாக அடையாளப்படுத்திக் காட்டவே முனைகின்றன.

ஒரு இனத்துடன் மற்றும் ஒரு இனம் தொடர்புடையது, உறவைக் கொண்டிருக்கிறது அல்லது அது குறிப்பிட்ட இனத்தின் ஏதாவதொரு சிறப்பம்சம் மற்றும் ஒரு இனத்தில் காணப்படுகிறது என்பதை உடனடியாக ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. தமது இனத்தின் அடையாளப்படுத்தல் அம்சம் மங்கிப்போய் விடுமோ என்ற அச்சமே இதற்குக் காரணமாகும்.

எனினும், சமாதானம் எனப் பேசப்படுகின்ற போது, இந்த விடயத்தில் சற்று மாற்றம் காணப்படுகிறது. இனங்களுக்கு மத்தியில் வரலாற்று



ரீதியான அல்லது அன்றைய காலரீதியான உறவுகள் இருப்பதை ஏற்றுக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுவிடுகிறது.

இனங்களுக்கு இடையிலான உறவுகள் என்ற விடயத்தில், மதப்பெரியார்கள் முக்கிய பங்குவகிக்கின்றனர். இவர்கள், தமது மத வளர்ச்சிக்கு உதவும் அதேநேரம், மாற்று மதத் தவருடன் சகோதரத்துவத்தைப்பேணும் போதனைகளை, தமது மதத்தவருக்கு வழங்குகிறார்கள். இயல்பாகவே அனைத்து மதங்களும் இவ்வாறான அம்சங்களைக் கொண்டுள்ளன. மாற்று மதத்தை அல்லது மாற்று இனத்தை தூஷித்து, தமது இன அடையாளத்தைக் காக்கமுனைவது தோல்வியையே கொண்டுவரும். அதற்குப் பதிலாக மாற்று இனத்தையும், அரவணைத்துச் செல்வது நன்மையையே பயக்கும்.

இன்றுவரையில் இலங்கையில் இனங்களுக்கு இடையிலான உறவுகளை வளர்ப்பதில், மதப்பெரியார்களின் பங்களிப்புப் போதுமானளவில் இருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. ஆயினும், இதனைக குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ள முடியாது. இலங்கையைப் போன்ற வளர்முக நாடுகளை விட, வளர்ச்சியடைந்த நாடுகளிலும்கூட இன ரீதியான அடையாளப்படுத்தல்களை மதப் பெரியார்கள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், இவர்களைப் பொறுத்தவரையில் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட வேண்டும். மதப்பெரியார்கள் இணைந்து இனஒற்றுமைக்கு முன்னுதாரணமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அப்போதே மதரீதியாகக் கட்டுண்டுள்ள எமது இனங்களுக்குப் புரிந்துணர்வின் ஊடாக சகோதரத்துவத்தை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். வாய்ப்புகள் சிலவேளைகளில் தானாகவே வந்து அமையும். சில வேளைகளில் வாய்ப்புகளை நாங்களே தேடிச்சென்று பெற்றுக்கொள்ளவேண்டியிருக்கும். இதில் வாய்ப்புகளைத் தேடிச்சென்று பெற்றுக்கொள்ளவேண்டிய நிலையே இலங்கை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

எனவே, நிரந்தர சமாதான வாய்ப்பை அடைய, இனங்களுக்கு இடையில் சகோதர புரிந்துணர்வுகளை மேம்படுத்திக்கொள்வது அவசியமானதொன்றாகும். இனமுறுகல் தீவிரமாகியுள்ள இலங்கையில் - ஒவ்வொரு மாணவன் படிக்கின்ற வரலாறுகளும், இன உணர்வுகளை வளர்ப்பதைக் காட்டிலும், இனங்களுக்கு இடையிலான எதிர் விளைவுகளைத் தூண்டுவதாக அமைந்துள்ளன. இதுவரை நாம் பார்த்த, இவ்வாறான இனக்குரோதச் செயற்பாடுகளை உடனடியாகக் களைந்து விட முடியாது. அவ்வாறான செயற்பாடு முதன்மை அதிகாரம் மதங்களினால் கட்டுண்டு இருக்கும் மக்களை, நல்வழிப்படுத்தும் மதப்பெரியார்களுக்கும்கூட இல்லை என்பது உண்மை.

எனவே, இந்த விடயத்தில் மாற்றுக் கருத்துகளுக்கு இடங்கொடுத்து, சகிப்புத்தன்மையுடன் செயற்படவேண்டிய அவசியம் மதப் பெரியார்கள் உட்பட, அனைத்து இன மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. இதனை நாம் விட்டுக்கொடுப்பு அல்லது தியாக மனப்பான்மை என்று கூட எடுத்துக்கொள்ளலாம்.

இனங்கள், மதங்கள் என்ற கட்டுக்கோப்புக்களிலிருந்து சற்றுவிலகி, சமூக வர்க்கத்தினர் என்ற பகுதிகளைப் பார்ப்போமானால், இன்றைய சமாதான முன்னெடுப்புகள், அவர்களை உரியமுறையில் சென்று சேரவில்லை என்றே கூறவேண்டும். பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் சமாதான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. தீர்வு ஒன்று முன்வைக்கப்படாமலேயே, அந்த அரசாங்கம் சமாதான ஊர்தி மூலம் மக்கள் வர்க்கத்தினரின் ஊடாக சமாதானத்தின் அவசியங்களை விளக்கிவந்தது. அந்த முயற்சிக்குரிய பலன்கள் கிடைக்கவில்லை. ஏனெனில், உருப்பெறாத மணப்பெண்ணாக இருந்த சமாதானத் தீர்வுப்பொதி என்பதைக் கொண்டு கிராமமக்களும், சமூக அந்தஸ்த்தில் உயர்ந்த மக்களும் தெளிவூட்டப்பட்டனர்.

எனவே, இங்கு சமாதானம் தொடர்பில் மக்களுக்கு இருந்த ஓரளவான நம்பிக்கையும், சந்தேகமாகவே வெளிப்பட்டது. இதன் காரணமாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின், சமாதான முயற்சி பலிக்கவில்லை. இன்று சமாதான முன்னெடுப்பைப் பொறுத்தமட்டில், சிறந்த நிலை ஒன்று காணப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளும், இலங்கை அரசும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமஷ்டியை ஏற்றுக்கொண்டுள்ளனர். சமஷ்டி என்ற விடயம் - இலங்கையைப் போன்ற மூன்றாம் உலக நாடு ஒன்றில் புதிதான விடயம் என்ற போதும், வளர்ச்சியடைந்தது. இலங்கையைப் போன்ற பல்லினங்களைக்கொண்ட நாடுகளில் இந்த முறையே, அந்த நாடுகளின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது. ஒரு இனம் மற்றுமொரு இனத்தின் உரிமைகளில் தலையிடாத போக்கு சமஷ்டி முறையில் காணப்படுவதால், அங்கு இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு மேம்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த சமஷ்டி முறை தொடர்பாக, தற்சமயம் தமிழ்மக்கள் மத்தியில் சாதகமான எண்ணக்கருக்களே நிலவுகின்றன, பதியவைக்கப்பட்டுள்ளன. ஆனால், சிங்களவர்கள் மத்தியில் சமஷ்டி முறை தொடர்பில், எதிரான கருத்துக்களே சென்றடைந்துள்ளன. சமஷ்டி ஆட்சி இலங்கையில் நடைமுறைப்படுத்தப் பட்டால், தமது உரிமைகளைத் தமிழர்கள் தட்டிப்பறித்துச் சென்றுவிடுவார்கள் என்ற விளக்கமே, பெரும்பாலான சிங்களவர்கள் மத்தியில் காணப்படுகிறது. இது கிராம மட்ட சிங்களவர்களை மட்டும் குறிக்காது, சமாதானத்தை வலியுறுத்திக்கொண்டிக்கின்ற சிங்களவர்கள் மத்தியில் இந்தக் கருத்துகள் காணப்படுகின்றன. ஆனால், சமாதானம் ஏற்படவேண்டும் எனற நோக்கில், இந்த சமஷ்டி முறையை தாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர். மறுகருத்தாகப் பார்த்தால், தமிழர்களுக்கு விட்டுக்கொடுக்கிறோம் என்ற நிலைப்பாட்டை அவர்கள் கொண்டுள்ளனர். இந்த நிலை மாற்றப்படுவதற்கு அரசாங்கம் பாரிய முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

சமாதானம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு உண்மையாக இருந்தால், அது தென்னிலங்கை சிங்களவர்கள் மத்தியில் குறிப்பாக, கிராமமட்ட மக்கள் மத்தியில் சமஷ்டி மற்றும் சமாதான முன்னகர்வுகள் தொடர்பில், விரிவான கொள்கைப் பிரசாரங்களை மேற்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். ஆனால், அரசாங்கம் இன்றுவரைக்கும் இந்தப் பொறுப்பிலிருந்து நழுவிப்போயுள்ளது. சமஷ்டி தொடர்பாக அரசாங்கம் தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே உரிய விளக்கங்களை வழங்கவில்லை.

கட்சியின் தலைமை நாடாளுமன்ற உறுப்பினர்களை, மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படியானால், அந்தப் பிரதிநிதிகளுக்கு இந்தச் சமாதானம் தொடர்பான உரிய உண்மைக் கருத்துக்கள் தெரிவிககப்பட்டிருக்குமானால், இன்று சமஷ்டிக்கு எதிராக சிங்களவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிழையான விளக்கங்களை மாற்றியமைத்திருக்க முடியும். அதன்மூலம், நீண்ட தொலைவில் தென்படுகின்ற சமாதான எதிர்பார்ப்பைச் சற்று முன்னகர்த்தி இருக்கமுடியும்.

தற்போதுகூட இதற்கு வாய்ப்பு நிறையவே இருக்கிறது. அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு- சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வே வழியென ஏற்றுக்கொண்டிருப்பதால், அரசாங்கத்திற்கு அது தொடர்பில் தமது பிரசுரங்களைச் சிங்கள மக்கள் மத்தியில் மிக விரைவாக எடுத்துச் சொல்லவேண்டும். கிராம மக்கள் மத்தியில், மக்கள் விடுதலை முன்னணியினர் ஏற்படுத்தியுள்ள சமஷ்டி தொடர்பான பயப்பீதியைக் களையவேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் மட்டுமே, அரசாங்கத்தினால் தமது சமாதான நகர்வை சிங்கள மக்கள் மத்தியில் முன்னகர்த்திச் செல்ல முடியும்.

நாட்டில் அடுத்தடுத்து தேர்தல்கள் வரவிருப்பதால், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்த விடயம் முக்கியத்துவம் பெறுகிறது. மறுபுறத்தில், இந்த சமஷ்டி முறை அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில், சிங்கள மக்கள் மத்தியில் இப்போதே தெளிவை ஏற்படுத்தினால், அது -

## தெற்குத் திசையினிலே...

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

தமது தேர்தல் வெற்றி வாய்ப்புக்களுக்குப் பாதகமாக அமைந்துவிடும் என அரசாங்கம் நினைக்குமானால், அது அரசாங்கத்தின் நீண்டகாலத் தோல்விக்கே வழிவகுக்கும்.

இதேவேளை, சமாதானத்தின் உறுப்பினராக விளங்கும் நோர்வேக்கும், இந்தத் தெளிவாக்கல் விடயத்திலும் பாரிய பங்குண்டு என்பதை மறுக்கமுடியாது. அண்மையில் அம்பாறைக்கு விஜயம் செய்திருந்த நோர்வேத் தூதுவர் - பிரட்ஸ்கருக்கு - இந்த விடயத்தை பொதுமக்களே வலியுறுத்தியமை சுட்டிக்காட்டத்தக்கது.

வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் நிலைமைகளுக்கு நேர் எதிரான நிலைமைகளே, இங்கு காணப்படுவதை நோர்வே அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. யூரோ நாணயத்தை ஐரோப்பியப் பொது நாணயமாகக் கொண்டுவருவதில், குறிப்பிட்ட நாடுகள் மிக விரைவான செயற்பாட்டை மேற்கொண்டன. அதனடிப்படையில் இன்று சர்வதேசப் புழக்கத்தில் யூரோ நாணயமும் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது. இந்த அனுபவபூர்வ உண்மையானது, இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் நினைத்துப் பார்க்கமுடியாது.

இலங்கை மக்கள் இன்னமும் தேசிய நலன் என்ற உணர்வுக்கு வந்துவிடவில்லை. இலங்கையைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு வரும் ஏதோவொரு வழியில் இனத்துரோகிகளாகவே இருந்து வருகின்றனர். தமிழர்களை- சிங்களவர்கள் துவேஷ மனப்பான்மையுடன் பார்க்கின்றனர்.

அதேபோல, தமிழர்களும் - சிங்களவர்களை எதிரிகளாகவே கருதுகின்றனர். எல்லாளன் மற்றும் துட்டகைமுனு அரசாட்சியின் பாதிப்பு, இன்னமும் இந்த இரண்டு இனங்களையும் பாதித்துக் கொண்டிருக்கிறது.

மறுபுறத்தில், மூன்றாவது இனமான முஸ்லிம்கள் இன்று தமிழர்களையும், சிங்களவர்களையும் எதிரிகளாகப் பார்க்குமளவிற்கு நிலைமை விரிசலடைந்து செல்கின்றன. எனவே, நோர்வே அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு தெளிவாக்கல் தொடர்பில், தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் பாரிய முன்னெடுப்பை மேற்கொள்ளவேண்டும். அதுவே, அவர்களின் முயற்சிக்கு ஏதாவது பிரயோசனத்தைக் கொடுக்கும்.

இந்தவேளையில், அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறிய கருத்தை, இங்கு சற்று ஆராய்வது பொருத்தமானது. ஜப்பானின் ரோக்கியோவில் கிடைத்துள்ள நிதியுதவியில், ஒரு பாரிய பங்கை கிழக்கில் நிலவும் தமிழ், முஸ்லிம் இன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தவேண்டும் என, அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதே. ஏனெனில், பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒரு தலைப்பட்சமான சமாதானத்தைக் கொண்டு வந்துவிடலாம். ஆனால், இனமுரண்பாடுகள் தொடருமானால், எந்தப் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானம் ஏற்படுத்தப்பட்டதோ, அந்தச் சமாதானம் தகர்ந்துவிட வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, சமாதான நகர்வில் அடிமட்ட மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தப்பட வேண்டும். அவர்களின் உணர்வுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதே, சமாதான விரும்பிகளின் ஒட்டுமொத்த கருத்தாகும்.


நிலைமை இவ்வாறிருக்க, இலங்கையின் தேசிய இரண்டு கட்சிகளான - ஐக்கிய தேசிய கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமது தேர்தல் முறைகளில் அடுத்த கட்ட நகர்வுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்து விடுவார்களோ என்ற பயத்தில், அந்தக் கட்சி அவர்களை அழைத்து, தம்புள்ளையில் சந்தோஷப்படுத்தியிருந்தது.

முதல்நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது - பிரதமருக்கும், அவர்களுக்கும் இடையில் காரசாரமான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றதாகவும், தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் முதல்நிலை அமைச்சர்களுக்கு வழங்கும் வாய்ப்புகள் தமக்கு வழங்குவதில்லை என்று, பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். எனினும் வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைத்ததும், கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசின் அபிவிருத்தித் திட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என பிரதமர் உறுதியளித்திருக்கிறார். மறுமுனையில் ஜனாதிபதி இந்த வாரம் கண்டியில் தனது பொழுதை கழித்து இருந்தபோது, அவர் தமது விசுவாசத்துக்கு உரியவர்களான - மங்கள சமரவீர, லக்ஷ்மன் கதிர்காமர், சரத் அமுனுகம போன்றோரை அழைதது்ப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார். எதிர்வரும் டிசம்பருக்குள் ஏதாவது மாற்றங்கள் ஏற்படுத்தமுடியுமா என, இந்தப் பேச்சுக்களில் ஆராயப்பட்டுள்ளது. பெரும்பாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் 2004 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்கலாமா? என்பதிலேயே, பொதுஜன ஐக்கிய முன்னணி கவனம் செலுத்தி வருவதாகத் தெரியவருகிறது.

இதற்கு மத்தியில் ஜப்பானின் விசேட பிரதிநிதி யசுசி அகாஷியின் இலங்கைப் பயணம் - சமாதானத்துக்கு எந்தளவில் உதவுகிறதோ, இல்லையோ - தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில், ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான நம்பிக்கைக்கு ஒரு சிறிய உந்துதலை வழங்கியுள்ளது என்பது மட்டும் உண்மை.

# அணுவாயுதத் திட்டம் இல்லையென்பதை உறுதிசெய்ய ஈரானுக்கு ஒக்ரோபர் 31 ஆம் திகதிவரை காலக்கெடு!

## அமெரிக்காவும், சர்வதேச அணுசக்தி அமைப்பும் கூட்டாக விதிப்பு



அணுஆயுதங்களை உற்பத்தி செய்யும் திட்டம் எதுவும் தம்மிடம் இல்லையென்பதை, ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஈரான் வெளியிடவேண்டும் என்று, சர்வதேச அணுசக்தி அமைப்பு ஈரானிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈரானிடம் அணுஆயுதத் திட்டம் எதுவும் இல்லையெனின், அதனை நிரூபிக்கக்கூடிய மேலதிக ஆதாரங்களை ஐ.நா அணு ஆயுத அமைப்பிடம் சமர்ப்பிக்கவேண்டுமென்று, அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

அணுசக்தித் திட்டம் என்ற பெயரில் அணுஆயுத உற்பத்தியில் ஈரான் ஈடுபடுவதாக அமெரிக்கா ஏற்கனவே குற்றஞ்சாட்டியிருந்தது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை ஈரான் மறுத்துள்ளது. தங்களுக்குத் தேவையான எரிபொருள் சக்தியினை பெறுவதற்கான மூலப்பொருளான வலுக்குறைந்த யுரேனியத்தையே தாம் தயாரிப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது.

எந்தத் தேவை கருதியும் யுரேனியத்தைக் பயன்படுத்தி எந்தப் பொருட்களையும் ஈரான் தயாரிக்கக் கூடாதென, ஐ.நா அணு ஆயுத அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, சர்வதேச அணுசக்தி அமைப்பின் ஈரானிற்கான பிரதிநிதி அலி அக்பர் சலிகி - அணு உற்பத்தி தொடர்பான திட்டங்களை வெளியிடுவதற்கான காலஎல்லையை - ஈரான் ஏற்றுக்கொள்ளாது எனத் தெரிவித்தார்.

அத்துடன் - ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கா, இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதன் முலம் அயல்நாடான ஈரானினுள்ளும் புகுவதற்குத் திட்டமிட்டுள்ளது என்றும், ஈரான் மட்டுமன்றி மத்திய கிழக்கு நாடுகள் முழுவதிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கு முயற்சிக்கின்றது என்றும் அக்பர் சலிகி குற்றஞ்சாட்டினார்.

## உலக நோக்கு

## செப்ரெம்பர் 11 தாக்குதல் நினைவையொட்டிய ஒளிநாடாவில் தோன்றுபவர் பின்லேடன்தான்!

### உறுதிசெய்கிறது அமெரிக்க புலனாய்வுத்துறை



(வோஷிங்டன்)

அமெரிக்காவில், செப்ரெம்பர் 11 தாக்குதலின் இரண்டாவது நிறைவை ஒட்டி அண்மையில் வெளியிடப்பட்ட ஒளிநாடாவில் தோன்றுபவர் பின்லேடன் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் உளவுப் பிரிவான சி.ஐ.ஏ தெரிவித்துள்ளது.

## போர்த்துக்கல் விமான விபத்தில் 3 குழந்தைகள் உட்பட 10 பேர் பலி!

போர்த்துக்கல்லில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விமான விபத்தொன்றில் மூன்று குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர்த்துக்கல்லின் மரீட்டா என்ற தீவுக்கு அப்பாலுள்ள அட்லாண்டிக் சமுத்திரத்தில் இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

விபத்துக்குள்ளான விமானத்தில் பிரிட்டனைச் சேர்ந்த விமானியும், 9 ஸ்பானியரும் இருந்தனர். இவர்கள் விடுமுறையைக் கழிப்பதற்காக மலாக்காவிற்குச் சென்று திரும்புகையிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்திருக்கிறது.

மரணமடைந்த பெண் ஒருவரின் உடலையும், சிதைந்த விமானத்தின் பகுதி ஒன்றையும் இதுவரை தாம் மீட்டுள்ளதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

# அரபாத்தை பதவி விலக்கும் இஸ்ரேலின் யோசனைக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இணங்கக்கூடாது!

## அரேபிய மற்றும் அணிசேரா நாடுகள் கோரிக்கை



(காஸா)

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தை பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்று இஸ்ரேல் விடுத்த யோசனைக்கு இணங்க வேண்டாம் என்று - அரேபிய நாடுகளும், அணிசேரா நாடுகளும் - ஐ.நா பாதுகாப்பு சபையிடம் வேண்கோள் விடுத்துள்ளன.

அரபாத்தை பதவி விலக்கக் கோரும் இஸ்ரேலின் இந்த முடிவு, இரு நாடுகளுக்கிடையிலான பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்றும் இந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

அரபாத்தை பதவிவிலக்கக் கோரும் கோரிக்கை தவறு என்று மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஐ.நா பிரதிநிதி ரேர்ஜி றியோட் லாசன், ஐ.நா பாதுகாப்புச் சபையில் தீர்மானம் ஒன்றை முன்வைத்துள்ளார். கடந்த வியாழக்கிழமை இது தொடர்பாக ஐ.நா பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமெரிக்கா, ரஷ்யா உட்பட ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த நாடுகள், இஸ்ரேலின் இந்த முடிவுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. இஸ்ரேலின் இந்தத் தீர்மானம் மோசமான பின்விளைவுகளையே ஏற்படுத்தும் என்று அவை தெரிவித்தன.

இதேவேளை, பலஸ்தீனத்தின் புதிய பிரதமராக பதவியேற்கவிருக்கும் அகமட் கூரே - புதிய அரசு ஒன்றை அமைப்பதை தான் தற்காலிகமான நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளார். இஸ்ரேலின் கோரிக்கை - மத்திய கிழக்கு முழுவதையுமே அச்சுறுத்தலுக்கு உட்படுத்தியிருப்பதாலேயே - தான் தற்போது பதவியேற்பதை தள்ளிப் போட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த வாரம் நடைபெற்ற இரு தற்கொலைத் தாக்குதல்களை அடுத்தே அரபாத்தை பதவி விலக்கவேண்டும் என்ற கோரிக்கையை இஸரேல் - விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சுவீடன் வெளிவிவகார அமைச்சர் லிண்டா படுகொலை:

# கொலையாளியின் படம் பாதுகாப்புக் கமராவில்!



சுவீடன் வெளிவிவகார அமைச்சர் அனா லிண்டாவினை கொலைசெய்த நபரின படம் ஒன்று - சம்பவம் நடைபெற்ற இடத்தில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கமராவில் பதியப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையாளியின் தெளிவற்ற படமே கமராவில் பதியப்பட்டிருந்ததாகவும், எனினும், சுவீடன் பத்திரிகைகள் அந்தத் தெளிவற்ற படத்தினை கணனி மூலம் வடிவமைத்து தெளிவான படங்களை பிரசுரித்தமையால் - கொலையாளி தப்பிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஈராக்கில் தன்னைத் தானே ஆளும் அரசு:

# பிரான்ஸ் முன்வைத்த யோசனையை நிராகரிக்கின்றார் கொலின் பவல்!

தன்னைத்தானே ஆளும் அதிகாரங்களைக் கொண்ட அரசொன்றை ஈராக் அமைக்கவேண்டும் என்று, பிரான்ஸ் முன்வைத்த கருத்தை - அமெரிக்க இராஜங்க அமைச்சர் கொலின் பவல் நிராகரித்துள்ளார். பிரான்ஸின் கருத்து, சாத்தியப்படக் கூடியதல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளியன்று பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் டீ விலப்பின் - ஒரு மாதத்துக்குள் ஈராக்கிய அரசொன்றை அமைக்கவேண்டும் என்றும், அவர்களுக்கான அரசியலமைப்பை இந்த ஆண்டு முடிவதற்குள் உருவாக்கவேண்டும் தேர்தல் ஒன்றை அடுத்த வசந்த காலத்திற்குள் நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதேவேளை, சிதைந்த ஈராக்கை கட்டியெழுப்புவதற்கு இறைமையுள்ள ஈராக்கிய அரசொன்றை அமைக்க வேண்டும் என்று ரஷ்யாவும் கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன், ஈராக்கில் இருக்கவேண்டியது அமெரிக்கப் படையினர் மட்டுமல்ல என்றும், சர்வதேச அமைதிப்படையே அங்கு பணிபுரிய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.



மேலும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளான பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மன் ஆகியன, ஈராக்கில் தொடர்ந்து போர் நடைபெறுவதாக அமெரிக்கா கூறுவதை ஏற்கமுடியாது என்று தெரிவித்துள்ளன.




சினிமாவில் வரும் வில்லன்கள் கொலை, கொள்ளைகளுக்கு அஞ்சமாட்டார்கள். அவர்களுடைய தொழில்களே இவைதான் என்று காட்டப்படுவார்கள். இவர்களுக்குப் பின்னால் பெரும் பணக்காரர்கள், செல்வந்தர்கள், அரசியல்வாதிகள் இருப்பார்கள். இவர்கள் தங்களுக்குப் போட்டியாக எவர்வந்தாலும் அவர்களை முறியடிக்க அல்லது ஒழித்துக்கட்ட - கொலை, கொள்ளைகளுக்கு அஞ்சாத இந்த வில்லன்களைப் பயன்படுத்துவார்கள்.

இது இப்போது சினிமாவில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் நடந்துவருகிறது. கூலிக்குக் கொலை செய்பவர்கள் இலங்கையில் இன்று மிக மலிந்து விட்டார்கள்.

இவர்களுக்குள்ளேயே பல குழுக்களாக உருவாகிச் செயற்படுகின்றன. இவை இப்போது பாதாள உலகக்கோஷ்டிகள் என்று அழைக்கப்பட்டு வருகின்றன.

பாதாள உலகக் கோஷ்டிகளைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குச் சிறைகளில் கூட மதிப்பும் மரியாதையும் உண்டு.

சிறையிலிருக்கும் இந்தப் பாதாள உலகக் கோஷ்டியினருக்கு எந்தக் குறையும் இல்லை. அங்கு அவர்கள் சகல வசதிகளையும் அனுபவித்துக்கொண்டு ஓய்வெடுப்பதாகவே சொல்லமுடியும்.

ஆனாலும், அங்கிருப்பவர்களிடமே கைத்தொலைபேசி மூலம் சில கொலைகளுக்கு விலை பேசப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சில தினங்களுக்கு முன் பட்டப்பகலில் வெள்ளவத்தையில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சில வாரங்களுக்கு முன் ஒரு அரசியல்வாதி ஜனாதிபதி மாளிகைக்கு சமீபத்தில் பொலிஸ் தலைமை அலுவலகத்திற்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் சந்திரிகா அம்மையாரின் பொதுஜன ஐக்கிய முன்னணியைச்சேர்ந்தவர்.

சில தினங்களின் பின்னர் இதே கட்சியைச் சேர்ந்த மற்றொரு அரசியல்வாதி சுட்டுக்கொல்லப்பட்டார்.

மொறட்டுவையில் மேலும் ஒருவர் சமீபத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொலைகளில் குமார் பொன்னம்பலத்தின் கொலையுடன் சம்பந்தப்பட்ட ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

குமார் பொன்னம்பலத்தின் கொலைக்கு சாட்சியமே இல்லாமல் அழிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லிக்கொள்கிறார்கள்.

இந்தக் கொலைகள் தவிர, பாதாள உலகக் கோஷ்டிகளுக்கிடையே மோதல் ஏற்பட்டு, அவர்களும் தங்களுக்குள் தாங்களே ஒருவரையொருவர் சுட்டுக் கொலை செய்து கொள்கிறார்கள்.

இக்கோஷ்டி மோதல்களில் கொல்லப்படுவர்களின் வாரிசுகள் பழிக்குப் பழிவாங்குவதாகச் சபதம் செய்து கொள்கிறார்கள். பின்னர் இவை நிறைவேற்றப்படுகின்றன.

பொலிஸார் பகீரதப்பிரயத்தனம் செய்து கொலைகாரர்களையும் கொள்ளையர்களையும் கண்டுபிடிக்க முயற்சி செய்கின்றனர்.

பணமுதலைகளும் அரசியல்வாதிகளும் இந்தக் கோஷ்டிகளுக்குத் துணையாகவும் ஆதரவாகவும் இருப்பதாகக் செய்திகள் தெரிவிக்கின்றன. பாதாள உலகக் கோஷ்டியை, பெரும்புள்ளி ஒருவர் சிறையில் தொடர்புகொண்டு ஒரு கொலைக்கு விலைபேசியதாக, வாரப் பத்திரிகை ஒன்று சமீபத்தில் ஒரு செய்திக் கட்டுரை வெளியிட்டிருந்தது. இந்தப் பாதாள உலகக் கோஷ் டிகளுடன் படைகளில் இருந்து நவீன ஆயுதங்களுடன் தப்பியோடிய பயிற்சிபெற்ற "போர் வீரர்கள்" சிலர் இருப்பதாகவும், இந்தத் தப்பியோடிய படை வீரர்களுக்கும் பாதாள உலகக்கோஷ்டிகளுக கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகவும் சில பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

திருகோணமலைக்கு ஆபத்து, இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து, கிழக்கில் முஸ்லிம்களுக்கு ஆபத்து என்று அபாயச்சங்கு ஊதிக்கொண்டு இருக்கும் சந்திரிகா, கதிர்காமர் ஆகியோரின் பொதுஜன முன்னணியினர், ஆயுதப்படைகளில் பயிற்சிபெற்று, நவீன ஆயுதங்களுடன் தப்பியோடி பாதாள உலகக் கோஷ்டிகளில் இணைந்து நாட்டில் நடமாடித்திரியும். 50 ஆயிரத்துக்கும் அதிகமான ஓடுகாலிகளினால் மக்களுக்கு ஏற்பட்டுவரும் ஆபத்துக்கள் பற்றி, ஏன் சிந்திக்க முடியவில்லை?

ஜனாதிபதி மாளிகைக்குச் சமீபத்தில் தமது கட்சியைச்சேர்ந்த அரசியல்வாதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டபோதுகூட, தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று அஞ்சாத ஜனாதிபதி - தமது மாளிகைக்கு அருகேயுள்ள மற்றுமிரு பெரிய ஹோட்டல்களைத் தாண்டியிருக்கும் மூன்றாவது ஹோட்டலில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தங்கியிருந்து சென்றதால் தனக்கு ஆபத்து என்று அலறினார்.

அவருக்கு கிலி பிடித்திருக்கிறது. எந்தப் பாதுகாப்பும் இல்லாத சாதாரண பொதுமக்கள் - ஓடுகாலிவீரர்களுடன் தொடர்புள்ள பாதாள உலகக் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்களால் எந்தநேரம் என்ன நேருமோ என்ற அச்சத்தில் வாழவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

"புலிகளைப் பயங்கரவாதிகள் என பொதுமக்களுக்கு அச்சமூட்டிவரும் ஊடகங்களும் பாதாள உலகப்பயங்கரவாதிகள் பற்றி பொதுமக்களுக்கும் அரசுக்கும் எச்சரிக்கை செய்ய ஏன் தவறுகின்றன?"

படையில் இருந்து தப்பியோடிச் சென்றவர்களை உருவாக்கியவர்கள் யார்?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

"சமாதான முயற்சிகளுக்கு எதிராக நான்கு தினங்கள் தொடர் ஊர்வலம் ஒன்று நடத்த ஜே.வி.பி. தீர்மானித்துள்ளதாம். கடந்த வாரத்தின் முன்னர் தான் பாதயாத்திரை ஒன்றை காலி முதல் கொழும்பு வரை நடத்தி தாம் சமாதானத்திற்கும், அமைதிக்கும் பாதகமானவர்கள் என்பதை பகிரங்கப்படுத்தியிருந்தனர்.

அடுத்த யாத்திரையை ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அடிச்சுவட்டையொட்டி, கண்டியிலிருந்து கொழும்புவரை நடத்தப் போவதாகவும் அறிவித்திருந்தார்கள்.

தேசிய வாதிகள் வகுப்பு வாதிகளாகவும், இடதுசாரிகள் வலதுசாரிகளாகவும், சமதர்மவாதிகள் தீவிர இனவாதிகளாகவும் பரிணாம மாற்றம் காண்பது அரசியலில் சர்வசாதாரணமான விடயம்தான்.

ஆனால், எதிர்வாதிகளாக இருந்தாலும், ஜே.வி.பியினர் தம்மைப் புரட்சி வாதிகள் என்று கூறுவதில் பெருமை கொள்பவர்கள்.

அவர்கள் புரட்சி இப்போது பாதயாத்திரையில் வந்து நிற்கிறது....

அடுத்து அவர்கள் காவியுடை தரித்து "புத்தம் சரணம் கச்சாமி" என ஓதினால்கூட.... ஆச்சரியப்படத் தேவையில்லை

- தெருவாசி

# வவுனியா பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினருடன் கண்காணிப்புக்குழுவினர் காரசாரமான விவாதம்!

வவுனியா மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும், பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினருக்குமிடையே நேற்றுப் பகல் வவுனியா பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழு அலுவலகத்தில் காரசாரமான விவாதம் நடந்தது.

வவுனியா பொங்குதமிழ் அலுவலகத்திற்கு நேற்றுப் பகல் ஒரு மணியளவில் சென்ற வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிக்ள் - நீங்கள் பொங்குதமிழ் நிகழ்வுக்கு பொது மக்களிடமிருந்து பணம் அறவிடுகிறீர்கள். இதனை யாருடைய அனுமதியுடன் செய்கிறீர்கள். அத்துடன், நிகழ்வுக்கு புலிக்கொடி ஏற்றப்போகின்றீர்களா? புலிக்கொடி விடுதலைப் புலிகளின் கொடி. அதனை நீங்கள் ஏற்றமுடியாது. உங்களுடைய பொங்குதமிழ் நிகழ்வு மற்றைய இனத்தை சினங்கொள்ள வைப்பதாக இருக்கக்கூடாது என நிபந்தனைகள் விதிப்பதுபோல கூறியுள்ளனர்.

இதனைச் செவிமடுத்த பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் -

எமது நிகழ்வு சிங்கள மக்களைச் சினங்கொள்ள வைப்பதற்காக நடத்தப்படவில்லை. இது எந்தவித அரசியல் கலப்படமும் இல்லாதது. இது ஒரு பொதுநிகழ்வு. இந்த நிகழ்வுக்குப் பணம் தேவை. அதனைப் பொது மக்கள் தருகிறார்கள். இதற்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை.

நாம் இந்த நிகழ்வில் புலிக் கொடி ஏற்றுவோம். ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து இது தமிழரின் கொடி. தமிழரது அடிப்படை அடையாளம். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் பொது இடங்களிலுள்ள படையினரை 160 நாட்களுக்குள் விலக்குவதாக நீங்கள் கூறினீர்கள். ஆனால், இங்கு ஒன்றும் நடைபெறவில்லையென, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த கண்காணிப்புக் குழுவினர் - எமக்கு இந்தச் செய்திகளெல்லாம் வாய்மூலமாகத்தான் வந்தன. அவற்றின் உண்மைத் தன்மையைத் தெளிவாக்குவதற்காகவே இங்கு வந்தோம். பொங்குதமிழ் நிகழ்வினை படையினர் எந்தவிதத்திலும் குழப்பமாட்டார்கள் எனத் தெரிவித்து, அங்கிருந்து சென்றனர். (03)

# ஆயுத விநியோகஸ்தர்களின் பதிவுகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்கிறது!

(கொழும்பு)

அடுத்த வருடத்தில் முப்படையினருக்கு யுத்த உபகரணங்கள் போன்றவற்றை விநியோகிப்பவர்களின் பதிவுகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இதன்பிரகாரம்- 2004 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்துக்கென 23 வகையான உபகரணங்களும், எட்டு வகை யுத்த வாகனங்களும், விமானப் படைக்கு 20 விமானங்களும், கடற்படைக்கு 11 ரோந்துப் படகுகளும் பெறப்படவிருக்கின்றன.

பரசூட் அணியினருக்கு பரசூட் சம்பந்தமான உபகரணங்களும் கொள்வனவு செய்யவேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

போர் நிறுத்த உடன்பாட்டுக்குப் பின்னர் - கடற்படை, விமானப் படைக்கு விமானம், ரோந்துப்படகு என 31 படைக்கலங்கள் கொள்வனவு செய்யப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

கட்டுநாயக்க விமானநிலையத்தில் ஆறு விமானங்கள் தாக்குதலுக்குள்ளாகிச் சேதமடைந்தபின்பு, போக்குவரத்து விமானம் எதுவும் கொள்வனவு செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தனித்து நின்று ஐ.தே.க அரசாங்கத்தை சுதந்திர கட்சியால் தோற்கடிக்க முடியாது

## ஒப்புக்கொள்கிறார் அனுரா



, எந்தவொரு அரசியல் கட்சியுடனும் கூட்டமைப்பு ஏற்படுத்தினாலும், அதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதற்குச் சான்றுகள் இருப்பதாகவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய சூழ்நிலையில் - ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் தனித்து தோற்கடிக்க முடியாதென, அனுரா பண்டாரநாயக்க மேலும் கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்தால், அந்தக்கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழித்துவிடும் என்றும் சிலர் தெரிவித்தாலும் சுதந்திரக் கட்சியை, எவராலும் அசைக்க முடியாதென்றும் அனுரா குறிப்பிட்டார்.

## விவசாய வீதி புனரமைப்பு

(நவிண்டில்)

அண்மையில் துன்னாலை மத்தியிலுள்ள அல்லையம்பதி விவசாய வீதி - அவ்வூர் மக்களின் பங்களிப்புடனும், சமுர்த்தி அதிகாரசபையின் ஒரு லட்சம் ரூபா நிதியுதவியுடனும், புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

# இனப்பிரச்சினை பற்றிய மாநாட்டில் தமிழ்ச்செல்வனும் பங்குபற்றுவார்!

அயர்லாந்தில் நடைபெறவுள்ள சர்வதேச நாடுகளின் இனப்பிரச்சினை தொடர்பான மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொள்ளவுள்ளார்.

நோர்வே அரசாங்கத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் அயர்லாந்தில் இந்த மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் அரச தரப்பில் முக்கிய அமைச்சர்களும் கலந்துகொள்ளவிருப்பதாக நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (01)

# துப்பாக்கி சூட்டுக்கிலக்கான விற்பனை முகவர் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாண்டவன் வெளிப் பகுதியில் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யும் முகவர் ஒருவர், இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

நேற்றுமாலை 3.40 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சைக்கிளில் வந்த இருவர் இவரைச் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த புஸ்பராசா றேமன் சபேசன் (வயது 25) என்பவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# புலிகளின் தற்போதைய நிலை தொடர்பாக டென்மார்க் தூதுவர் ரணிலுக்கு விளக்கம்!

(கொழும்பு)

நிரந்தர சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால், இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் எனப் புலிகள் எதிர்பார்ப்பதாக, டென்மார்க் தூதுவர் மைக்கல் ஸ்ரென்போர்க், பிர தமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.

டென்மார்க் தூதுவர் வன்னியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான சந்திப்புப்பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்துக்கூறிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக, விடுதலைப் புலிகள் கூடிய அக்கறை செலுத்தி வருவதாகவும், அவ்வாறான சபை ஒன்று அமைக்கப்பட்டாலே வட்க்கு-கிழக்கில் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும் என்றும் புலிகள் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆகையால், இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட்ட பின்னர் தான், நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு இணங்க முடியும் என்பதையும் புலிகள் உறுதியாகக் கூறியதாகத் தூதுவர் பிரதமரிடம் விரிவாக எடுத்துக் கூறினார்.

## பாடசாலைக்கு தொலைபேசி வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ். கரணவாய் பொன்னம்பல வித்தியாலய பழைய மாணவரும் சட்டத்தரணியுமான மா.தில்லைநாதன், 20 000 ரூபா பெறுமதியான தொலைபேசி வசதியை, பொன்னம்பல வித்தியாலயத்திலுள்ள கணித மூலவள நிலையத்திற்கு, அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளார் என அதிபர் பொன்னையா தெரிவித்தார். (116)

## கழுத்துறை சிறைக்கைதிகளை

# ஜனாதிபதியிடம் மன்னிப்பு கோருமாறு பொ.ஐ.முன்னணி எம்.பி. ஆலோசனை

(கொழும்பு)

களுத்துறை சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை- பொதுமன்னிப்புக் கோரி, தனித்தனியாகக் கடிதங்களை ஜனாதிபதிக்கு அனுப்புமாறு நாடாளுமன்ற உறுபினர்கள் கோரினர்.

கடந்த வியாழன் அன்று, களுத்துறைச் சிறைச்சாலைக்கு சென்ற பொதுஜன ஐக்கியமுன்னணியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக, களுத்துறைச் சிறைக்கைதிகள் தெரிவித்தனர்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 தமிழ் அரசியல் கைதிகளையும், நேரில் சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் உதவியாளர் - கைதிகள் ஒவ்வொருவரும் தனித் தனியாக ஜனாதிபதிக்கு பொதுமன்னிப்புக் கோரி கடிதங்களை எழுதித் தருமாறும்,

இந்தக் கோரிக்கைகள் அடங்கிய கடிதங்களை அடுத்த வாரம் தாம் சேகரித்து தமது நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாக ஜனாதிபதிக்கு சமர்ப்பித்து பொதுமன்னிப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளதாக, களுத்துறை சிறைக்கைதிகள் செய்தி ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## இலங்கையரை திருப்பியனுப்புவதற்கு லெபனான் இணக்கம்

விசா இன்றி லெபனான் நாட்டில் தங்கியிருக்கும் 200 இலங்கையரை கட்டணம் எதுவுமின்றி இலங்கைக்குத் திருப்பியனுப்புவதற்கு, லெபனான் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர், அண்மையில் லெபனானுக்கு விஜயம் செய்து, லெபனான் ஜனாதிபதியைச் சந்தித்தபோதே, இந்த இணக்கம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அம்பாறை மாவட்ட....

வடக்கு - கிழக்கில் இன்னமும் சுதந்திரம், அமைதி, இயல்பு வாழ்க்கை கொண்ட சிவில் சமூகம் உருவாகவில்லை. இதனை உருவாக்கும் பொறுப்பு அரசுக்கு மட்டுமல்ல, புலிகளுக்கும் உள்ளது எனத் தெரிவித்தார்.

முஸ்லிம்களுடனான சந்திப்பில், ரவூப் ஹக்கீம் உட்பட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.ஹரிஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பை அடுத்து கல்முனை பிரதேச செயலகத்தில், கல்முனை சமாதான சபையைச் சேர்ந்தவர்களுடனும், அகாஷி சந்திப்பொன்றை நடத்தினார்.

இதன்பின்னர் - கல்முனையிலுள்ள கிறிஸ்தவ இல்ல மண்டபத்தில் தமிழ்மக்களுடனான சந்திப்பொன்றை அகாஷி நடத்தினார். இதில், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான அரியநாயகம் சந்திரநேருவும் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு அம்பாறை சென்ற தூதுவர், அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளையும், அமைச்சர் பி.தயாரத்னா தலைமையிலான சிங்கள மக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன்பின்னர் - மாலை மூன்று மணிக்குத் தூதுவர் அகாஷி கொழும்பு திரும்பினார்.

முஸ்லிம் மக்களுடைய பிரச்சினைகள் குறித்து கவனத்தில் எடுப்பது மாத்திரமல்லாமல், விடுதலைப் புலிகள் அமைப்பினரைச் சந்திக்கும் போது, இந்த விடயம் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்படும் என அவர் தெரிவித்ததாக, முஸ்லிம் மக்களுடனான சந்திப்பில், கலந்து கொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். (07)

வேலைக்கு ஆட்கள் தேவை

ஹோட்டல் ஒன்றில் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள உடன் ஆட்கள் தேவை

☆ ரீமேக்கர் ☆ உணவு பரிமாறுபவர்
☆ உதவியாளர்கள் ☆ பில் கிளார்க்

தொடர்புகளுக்கு
ரஹ்மான் ஹோட்டல்
226, K.K.S. வீதி யாழ்ப்பாணம் (480)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
lectures by :
Mr. M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
15.09.2003
திங்கள் மாலை 3.30 மணி
Monday, Wednesday 3.30 P.m. - 4.30 P.m.
HARY'S INSTITUTE
இல. 564 கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(சி-1517)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.